# நாலு மந்திரி கதை

சுவடியியலும் பதிப்பியலும் -
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
க. சிவசுப்பிரமணியன்

நெறியாளர்
பேராசிரியர் வீ. அரசு

தமிழ் இலக்கியத்துறை
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
மே - 2005

# நாலு மந்திரி கதை

சுவடியியலும் பதிப்பியலும் -
பட்டயப் பேற்றிற்காகச்
சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு
அளிக்கப்பெறும் பதிப்பேடு

பதிப்பாளர்
**க. சிவசுப்பிரமணியன்**

நெறியாளர்
பேராசிரியர் வீ. அரசு

**தமிழ் இலக்கியத்துறை**
சென்னைப் பல்கலைக்கழகம்
சென்னை - 600 005
மே - 2005

‘சுவடியியலும் பதிப்பியலும்’ -

பட்டயப் பேற்றிற்காகச்

சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு

அளிக்கப்பெறும் பதிப்பேட்டு எண்:
5011

# நெறியாளர் சான்றிதழ்

**பேராசிரியர் வீ. அரசு,**
துறைத்தலைவர்,
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'நாலு மந்திரி கதை'** எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைச் **'சுவடியியலும் பதிப்பியலும்'** எனும் பட்டயம் பெறுவதற்காக **க. சிவசுப்பிரமணியன்** அவர்கள் என் மேற்பார்வையில் பதிப்புச் செய்தார் என்றும் இப்பதிப்பு இவர்தம் தனி முயற்சியில் உருவானது என்றும் சான்றளிக்கிறேன்.

நெறியாளர்

**(பேராசிரியர் வீ. அரசு)**

நாள் : 08-07-2005.
இடம் : சென்னை.

# பதிப்பாளர் உறுதிமொழி

**க. சிவசுப்பிரமணியன்,**
தமிழ் இலக்கியத் துறை,
சென்னைப் பல்கலைக்கழகம்,
சென்னை - 600 005.

**'சுவடியிலும் பதிப்பியலும்'** என்னும் பட்டயப் பேற்றிற்காகச் சென்னைப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்கப்பெறும் **'நாலு மந்திரி கதை'** எனும் தலைப்பிலான இப்பதிவேடு என் தனி முயற்சியில் உருவானது என்று உறுதியளிக்கிறேன்.

பதிப்பாளர்

**(க. சிவசுப்பிரமணியன்)**

நாள் :08-07-2005.
இடம் : சென்னை.

# உள்ளடக்கம்


| | பக்கம் |
|---|---|
| பதிப்புரை | i - xx |
| 'நாலு மந்திரி கதை' | 1-56 |
| பின்னிணைப்புகள் | |
| 1. மனுநீதி எனும் மந்திரி சொன்ன கதை | 57-92 |
| 2. 'நாலு மந்திரி கதை' - சுவடிகள் அட்டவணை | |
| துணை நின்ற நூல்கள் | |

## பதிப்புரை

ஓலைச் சுவடிகளின் துணை கொண்டு கல்வி பயிலும் வழக்கம் பன்னெடுங்காலமாகத் தமிழ்ச் சமூகத்தில் இருந்து வந்துள்ளது. கற்போர் ஆசிரியர் வைத்திருந்த ஓலைச் சுவடியில் உள்ள பாடங்களைப் பிரதி செய்து கற்றனர். தமிழரின் சிந்தனை வளம் காலந்தோறும் ஏட்டில் பதிவு செய்யப்பெற்றது. ஏடுகளின் ஆயுள் குறைவாதலின் அவற்றைப் பிரதி செய்தல் அவசியமாயிற்று.

சுவடி எழுத்து முறை காலந்தோறும் சிற்சில மாற்றங்களுக்கு உள்ளானது. அவ்வக் காலத்து வரிவடிவத்திற்கேற்றவாறு சுவடிகளிலும் பிரதி செய்தலின் போது மாற்றம் ஏற்பட்டுள்ளது. ஏட்டில் எழுதுவதற்குத் தனிக் கவனம் தேவை. ஏடுகளின் இருபுறத்தும் எழுதுவதால் ஒற்றுக்குப் புள்ளி இடுவதில்லை. எகர, ஏகாரங்கள் வேறுபாடு இல்லாமலும், ஒகர, ஓகாரங்கள் சுழிக்கப்பெறாமலும், இடையின வல்லின ரகர, றகரங்கள் வேறுபாடின்றியும், ஒற்றைக் கொம்பு இரட்டைக் கொம்பு வேறுபாடில்லாது ஒற்றைக் கொம்பிட்டும், துணையெழுத்திற்கும் ரகரத்திற்கும் வேறுபாடின்றியும் எழுதப்பெற்று வந்தன. கூட்டெழுத்துகளும் கையாளப் பெற்றன. இவை தவிரச் சில குறியீடுகளும் இடம்பெற்றன.

பிரதி செய்வோரில் கூலிக்குப் பிரதி செய்வோரும், போதிய பயிற்சி இல்லாதோரும் இருந்தமையால் பிரதிகளில் பிழைகள் மலிந்தன. மேலும், ஒருவர் படிக்கக் கேட்டு எழுதப்பெற்றதாலும் தவறுகள் ஏற்படுவதற்கான வாய்ப்புகள் மிகுதி. தென்பாண்டி நாட்டினர் ழகர - ளகர, றகர - ரகர, நகர - னகர வேறுபாடின்றிப் பேசுவதால் அவ்வொலிகளைக் கேட்பவர் அவ்வாறே எழுதவும் செய்வர். இதனால் பிரதிபேதங்களுக்கும் பாடபேதங்களுக்கும் இடமாகிறது.

தாள்கள் தோன்றிய பிறகு ஓலைச் சுவடியிலுள்ளவை தாள்களில் படியெடுக்கப்பட்டுப் பாதுகாக்கப்பட்டன. அச்சுக்கலை அறிமுகமான பின்னர்ச் சுவடிகள் பதிப்பாக்கம் பெறத் தொடங்கின. ஏடுகளில் குவிந்திருந்த சிந்தனை வளம் அச்சு நூல்கள் வழிப் பரவலாக்கம் பெறத் தொடங்கியது.

## முதல் பதிப்பு

தமிழ் மொழியில் பதிப்புப் பணி கி.பி. 1812-இல் தொடங்குகின்றது. தொண்டை மண்டலம் சென்னைப் பட்டினத்தில் தஞ்சை நகரம் மலையப்பப் பிள்ளை குமாரன் ஞானப்பிரகாசனால் மாசத்தினச் சரிதை அச்சுக் கூடத்தில் 'திருக்குறள் - நாலடியார் - மூலம்' 1812-ஆம் ஆண்டு முதன் முதலில் பதிப்பிக்கப் பெற்றது. இப்பதிப்பில் நிறுத்தக் குறிகள், ஒற்றைக்கொம்பு -

இரட்டைக் கொம்பு வேறுபாடுகள், மெய்யெழுத்தில் புள்ளிகள் யாவுமின்றிச் சுவடியில் உள்ளவாறே எழுத்துகள் இருந்தன.

**பதிப்பு முன்னோடிகள்**

தொடக்கத்தில் பதிப்பு முயற்சி என்பது தனி மனிதர் சார்ந்து அமைந்தது. குறிப்பாக, ஞானப் பிரகாசன், எல்லீஸ், அம்பலவாணக் கவிராயர், திருத்தணிகை விசாகப் பெருமாளையர், திருத்தணிகை சரவணப் பெருமாளையர், இராமாநுசக் கவிராயர், வேதகிரி முதலியார், தண்டபாணி தேசிகர், மழவை மகாலிங்கையர், தாண்டவராய முதலியார், திரிசிரபுரம் சோடசாவதானம் சுப்பராய செட்டியார், சி.வை. தாமோதரம் பிள்ளை, இராவ்பகதூர் ச. பவானந்தம் பிள்ளை, பேராசிரியர் வையாபுரிப் பிள்ளை, மே. வீ. வேணுகோபாலப் பிள்ளை, உ.வே. சாமிநாதையர், திருமயிலை சண்முகம் பிள்ளை மேலும் பலரும் தனியாகச் சுவடிப் பதிப்பு நூல்களை வெளியிட்டுள்ளனர். இவர்களை அடியொற்றிப் பிற்காலத்தில் அமைப்புகள் பல பதிப்புப் பணியில் ஈடுபடத் தொடங்கின.

**சுவடிக் காப்பகங்கள்**

தமிழகத்தில் சுவடிக் காப்பகங்கள் பல உருவாகிச் சுவடிகளைப் பாதுகாத்தும் பதிப்பித்தும் வருகின்றன. அவை:

1. அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம், சென்னை.

2. உ.வே. சாமிநாத ஐயர் நூல் நிலையம், சென்னை.

3. பிரமஞான சபை நூல் நிலையம், அடையாறு, சென்னை.

4. தொல்பொருள் ஆய்வுத்துறை நூலகம், சென்னை.

5. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை.

6. சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், சென்னை.

7. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம்.

8. தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக்கழகம், ஓலைச்சுவடித்துறை, தஞ்சை.

9. மதுரைத் தமிழ்ச் சங்க நூல் நிலையம், மதுரை.

10. மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை.

மேற்சுட்டிய நிறுவனங்களின் பெருமுயற்சியால் இலக்கணம், இலக்கியம், காவியம், புராணம், நிகண்டு, சிற்றிலக்கியம், மருத்துவம், சோதிடம், இசை, நாட்டார் வழக்காறு எனப் பல்வகைகளில் அடங்கும் நூல்கள் பதிப்பித்து வெளியிடப்பெறுகின்றன.

தொடக்க காலப் பதிப்பாளர்கள் சுவடியில் உள்ளவாறே சீர் பிரிக்காமல் பதிப்பித்தனர். பின்னர், முன்னுரை, பதவுரை, பொழிப்புரை, சொல் அகராதி என்பற்றையும் சேர்த்துப் பதிப்பிக்கும் முறை கையாளப்பெற்றது.

தற்போது ஆய்வுப் பட்டங்களுக்கும் பட்டயங்களுக்குமாகப் பதிப்புகள் பெருமளவு வெளியாகி வருகின்றன. அவ்வகையில், சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் 2004-2005 கல்வியாண்டில் நடத்தப்பெற்ற 'சுவடியியலும் பதிப்பியலும்' எனும் பட்டயக்கல்வியின் நிறைவாகவே இப்பதிப்பேடு உருவாக்கம் பெற்றுள்ளது.

**சுவடி அறிமுகம்**

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ள 'நாலு மந்திரி கதை' எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியே இப்பதிப்பிற்குப் பயன்படுத்தப் பெற்றுள்ளது. சுவடி எண்: டி. 425.

மேற்குறிப்பிட்ட நூலகத்தில், 'நாலு மந்திரி கதை கும்மிப் பாட்டு' எனும் தலைப்பில் இரண்டு சுவடிகள் உள்ளன. திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை மூலம், 'நாலு மந்திரி கதை' எனும் தலைப்பில் ஏழு சுவடிகளும், 'நாலு மந்திரி கும்மி' எனும் சுவடியொன்றும், 'நாலு மந்திரி கும்மிப்பாட்டு' எனும் சுவடியொன்றும் உள்ளமை

அறிய முடிகிறது. இச்சுவடிகள் பற்றிய குறிப்புகள் பின்னிணைப்பு 2 - இல் தரப்பட்டுள்ளன.

## சுவடியின் புற அமைப்பு

- ★ 53 ஏடுகள் உள்ளன.
- ★ ஏட்டின் நீளம் 35 செ.மீ; அகலம் 2.5 செ.மீ.
- ★ ஏட்டின் முனைகள் அரைவட்ட வடிவில் வெட்டப்பட்டுள்ளன.
- ★ ஏடுகளை வரிசை மாறாமல் ஒன்றிணைப்பதற்காக ஏட்டின் இடப்பக்க முனையிலிருந்து 10 செ.மீ. இடைவெளியில் துளையிடப்பட்டுள்ளது.

## சுவடியின் அக அமைப்பு

- ★ எழுத்துகள் நேரான முறையில் அமைந்துள்ளன.
- ★ உரைநடையிலான சுவடி.
- ★ ஏடுகளின் வரிசை எண்கள் தமிழ் எழுத்துகளால் குறிக்கப்பட்டுள்ளன.
- ★ சிறு சிதைவுகள் ஆங்காங்கே இருப்பினும் சுவடி தெளிவாகவே உள்ளது.
- ★ ஏட்டில் ஒரு பக்கத்தில் நான்கு முதல் ஐந்து வரிகள் இடம்பெற்றுள்ளன.

**எழுத்துகள்**

இப்பதிப்பிற்கு எடுத்துக்கொண்ட சுவடியில் எழுதப் பெற்றுள்ள எழுத்துகளில் சில எழுத்துகள் கூட்டெழுத்துகளாக அமைந்துள்ளன. நூலில் பயின்று வரும் எழுத்துகளில் ள-ழ; ர-ற; த்த-ற்ற; ன-ந மாற்றங்கள் உள்ளன. பொதுவாக, பிரதி செய்பவர் தென்பாண்டி நாட்டவராக இருந்தால் இத்தகைய மாற்றங்கள் ஏற்படுவது இயல்பு. இம்மாற்றங்களைக் கொண்டு இந்நூலைப் பிரதி செய்தவர் தென்பாண்டி நாட்டினர் எனக் கருதலாம். மேற்கண்ட சில எழுத்து மாற்றங்கள் பற்றிய சில எடுத்துக்காட்டுகளைக் காணலாம்.

**உ - ஒ**

| | | |
|---|---|---|
| குடுத்து | - | கொடுத்து |

**எ - அ**

| | | |
|---|---|---|
| தெரிசனம் | - | தரிசனம் |
| அதிசெயப்பட்டு | - | அதிசயப்பட்டு |
| கெர்வம் | - | கர்வம் |

**அய் - ஐ**

| | | |
|---|---|---|
| கயி பரித்திட்டவர் | - | கைபரித்திட்டவர் |
| கயிலாசகிரி | - | கைலாசகிரி |

| | | |
|---|---|---|
| வய்த்து | - | வைத்து |
| கய்யிலே | - | கையிலே |

**எ - இ**

| | | |
|---|---|---|
| தெரவியம் | - | திரவியம் |

**இ - உ**

| | | |
|---|---|---|
| பிறப்பட்டு | - | புறப்பட்டு |

**ய - எ**

| | | |
|---|---|---|
| யெந்த | - | எந்த |
| யேது | - | ஏது |

**ய - இ**

| | | |
|---|---|---|
| யிரும்புணாலே | - | இரும்புணாலே |
| யிருப்பார்கள் | - | இருப்பார்கள் |
| யிப்படி | - | இப்படி |
| யிந்த | - | இந்த |

**ப - வ**

| | | |
|---|---|---|
| ஈசுபரி | - | ஈசுவரி |

**ன - ந**

| | | |
|---|---|---|
| னாங்கள் | - | நாங்கள் |
| னாலு | - | நாலு |

| | | |
|---|---|---|
| ஙான் | - | நான் |
| அனியாயம் | - | அநியாயம் |
| னித்திரை | - | நித்திரை |
| னூத்திருபது | - | நூத்திருபது |

**ன - ண**

| | | |
|---|---|---|
| பனிந்து | - | பணிந்து |
| அணுகிரகம் | - | அனுகிரகம் |
| பன்னி | - | பண்ணி |
| திண்ண | - | தின்ன |

**ள - ழ**

| | | |
|---|---|---|
| அளகாபுரி | - | அழகாபுரி |
| அளகேந்திரன் | - | அழகேந்திரன் |

**ர - ற**

| | | |
|---|---|---|
| தெரித்து | - | தெறித்து |
| குறுடு | - | குருடு |
| தோறணம் | - | தோரணம் |
| சற்ப்பம் | - | சர்ப்பம் |

### த்த - ற்ற

| | | |
|---|---|---|
| சுத்து | - | சுற்று |
| மத்துமுள்ள | - | மற்றுமுள்ள |
| பத்தினது | - | பற்றினது |
| நூத்திருபது | - | நூற்றிருபது |

### ச்ச - த்த

| | | |
|---|---|---|
| வச்சு | - | வைத்து |

### ழ்க் - ட்

| | | |
|---|---|---|
| கேழ்க்க | - | கேட்க |

### எழுத்து மிகுதல்

| | | |
|---|---|---|
| வந்தேன்னென்று | - | வந்தேனென்று |
| வெகும்மதி | - | வெகுமதி |
| ரத்தம்மொழுக | - | ரத்தமொழுக |
| பெண்ஞ்சாதி | - | பெண்சாதி |

### எழுத்து விடுபடல்

| | | |
|---|---|---|
| பாத்து | - | பார்த்து |
| மஞ்சவழியாக | - | மஞ்சம் வழியாக |
| அரமனை | - | அரண்மனை |
| வளப்பான் | - | வளர்ப்பான் |

இவ்வாறான எழுத்து மாற்றங்கள் பிரதி செய்பவரின் மொழிநடையை அறிந்துகொள்ளப் பயன்படுகின்றமை காணலாம். இப்பதிப்பில் பேச்சு வழக்குச் சொற்கள் அவ்வாறே கையாளப்பெற்றுள்ளன. பதிப்பின்போது சீர்திருத்த எழுத்துமுறை பின்பற்றப்பட்டுள்ளது.

## ஓலைச்சுவடியும் தாள்சுவடியும்

'நாலு மந்திரி கதை' என்னும் தலைப்பில் தாள் சுவடி ஒன்றும் சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் உள்ளது. எண்: டி. 424.

ஓலைச்சுவடியில் ஆசிரியர் பெயரோ, காலம் முதலான பிறகுறிப்புகளோ ஏதும் காணப்பெறவில்லை. தாள் சுவடியில் பிரதிசெய்தவர் பெயர் இறுதியில் இடம்பெற்றுள்ளது.

> **"இந்தப் படிக்குத் திருச்சினாப்பள்ளிச் சீமையில் சேர்ந்த கோநாடு தாலூக்கா விலே மேலசிந்தாமணியிலேயிருக்கும் வாத்தியார் வீரப்பிள்ளைகிட்ட இருந்து நாலு மந்திரிக் கதைக்கு நக்கல்"**

எனும் குறிப்பு உள்ளது.

ஓலைச்சுவடிக்கும் தாள் சுவடிக்கும் கதையமைப்பில் வேறுபாடு இல்லையெனினும், எடுத்துரைப்பு முறையில் வேறுபாடுகள் உள்ளன.

ஓலைச்சுவடியில் சுருங்கக் கூறியுள்ள சில பகுதிகள் தாள் சுவடியில் விரிவாகவும், தாள் சுவடியில் சுருங்கக் கூறியுள்ள சில பகுதிகள் ஓலைச்சுவடியில் விரிவாகவும் அமைந்து காணப்படுகின்றன.

ஊர்ப்பெயர், பாத்திரப் பெயர்கள் சிறிதளவில் மாறுபடுகின்றன. அவை அடிக்குறிப்பில் சுட்டப்பட்டுள்ளன.

போதவியாதரன் என்னும் மந்திரி கூறுகின்ற கதையின் முடிவானது ஓலைச்சுவடிக்கும் தாள் சுவடிக்கும் மாறுபட்டு அமைந்துள்ளது. அம்முடிவும் அடிக்குறிப்பில் சுட்டப்பட்டுள்ளது.

மனுநீதி எனும் மந்திரி கூறுகின்ற கதை ஓலைச்சுவடியில் சுருக்கமாக அமைய, தாள்சுவடியில் மிக விரிவாகக் காணப்படுகிறது மட்டுமின்றிக் கதை அமைப்பிலும் பெருத்த அளவில் வேறுபாடு உள்ளதால் அக்கதை பின்னிணைப்பு 1-இல் தரப்பட்டுள்ளது.

தாள்சுவடியில் 'கூறியது கூறல்' மிகுதியும் இடம்பெற்றுள்ளது. மொழிநடையும் சுவடியிலிருந்து வேறுபட்டு அமைந்துள்ளது.

இப்பதிப்பு ஓலைச்சுவடியையே பின்பற்றி அமைகின்றது.

**நாட்டார் கதை மரபு**

நாட்டார் இலக்கிய வகைமைகளுள் கதையும் ஒன்று. ஆதி மனிதன் தன்னுடைய அனுபவங்களை மற்றவர்களுக்குச் சொன்னதுதான் கதையின் தொடக்கம் என்பர். உலகெங்கிலும் கதைகள் வழங்கப்படுகின்றன. தமிழகத்தில் இன்றும் தாத்தா, பாட்டி கதை சொல்வது காணலாம்.

நாட்டார் கதைகளின் வழியே மக்களின் கற்பனை, அறிவு நுணுக்கம், வாழ்வியல் எண்ணங்கள், நீதிகள் ஆகியவற்றை அறியலாம். சமூக வரலாற்றைத் தெளிவாக எழுதுவதற்குப் பல்வேறு சமூகங்களிடையே வழங்கிவரும் பழங்கதைகளையும் ஆய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியம்.

மானிடவியல், சமூகவியல், உளவியல், தத்துவவியல் துறைசார்ந்த அறிஞர்கள் அவரவர் நோக்கில் கதைகளுக்கு விளக்கம் அளிக்கின்றனர். இயற்கை மாறுபாடுகளை உருவகங்களால் விளக்குவதற்காகக் கதைகள் ஏற்பட்டன எனப் பொதுவிளக்கம் தருகின்றனர். இயற்கையின் வளம், பிறப்பு, இறப்பு போன்றவற்றை விளக்குவது பழங்கதைகள் என்கிறார் மானிடவியல் அறிஞர் சர். ஜேம்ஸ் பிரேஜர். ஆசை நிறைவேறுவதற்கான கருவியே பழங்கதைகள் என்கிறார் உளவியல் பேரறிஞர் ஃபிராய்டு.

நாட்டார் கதைகள் வாய்மொழியாகப் பரப்பப்படுவன; மரபு வழிப்பட்டன; பல நூற்றாண்டுகளாக மக்களிடையே வழங்கி வருகையில் திரிபடையும் இயல்பு கொண்டன. இக்கதைகள் வாயிலாக அக்கால மக்களின் பழக்க வழக்கங்களையும் சமூக அமைப்பையும் நன்கு தெரிந்து கொள்ளலாம். மேலும், இக்கதைகள் பொழுது போக்கிற்காகக் கூறப்பட்டனவாயினும் இலக்கிய வளர்ச்சிக்கும் நீதி புகட்டவும் துணைபுரிகின்றன.

நாட்டார் கதைகளுள் மந்திரக் கதைகள், தேவதைக் கதைகள், விலங்குக் கதைகள், ராஜாராணி கதைகள் எனப் பல்வேறு வகைப்பாடுகள் உள்ளன. அவற்றுள், ராசாமந்திரி கதைகள் வெகுபரவலாக மக்களிடையே சொல்லப்பட்டு வந்தன. விக்கிரமாதித்தன் கதையில் மந்திரியின் அறிவு நுட்பத்திற்கு அளிக்கப்படும் முக்கியத்துவம் அனைவரும் அறிந்ததே. அவ்வகையில், இப்பதிப்பிற்காகப் பயன்பட்டது மந்திரிகளின் மதி நுட்பத்தை மையமாகக் கொண்ட 'நாலு மந்திரி கதை' என்னும் சுவடி.

## 'நாலு மந்திரி கதை' – கதைச் சுருக்கம்

அளகாபுரி என்னும் பட்டணத்தை அளகேந்திரன் என்னும் அரசன் ஆண்டு வருகிறான். மக்கள் குறையின்றி வாழ்கின்றனர். மதுராபுரியிலிருந்து

மதுரேசன் என்னும் அரசனின் மந்திரிமார்களான போதவாதித்தன், போதசந்திரன், போதவியாதரன், போதவிபீஷணன் ஆகியோர் அளகாபுரிக்கு வருகின்றனர்.

அங்கு ஒருவன் ஒட்டகத்தைத் தொலைத்துவிட்டுத் தேடிக்கொண்டிருக்கிறான். மந்திரிகள் நால்வரும் பார்க்காமலேயே ஒட்டகத்தின் நடத்தையை வைத்து அதன் அங்க அடையாளங்களைக் கூறுகின்றனர். தொலைத்தவன் அவர்களை அரசனிடம் கொண்டு செல்கிறான். அரசன் விசாரிக்கையில் மந்திரிகளின் மதிநுட்பத்தை அறிந்து வியக்கிறான். பின்னர் அவர்களைத் தன்னுடனேயே இருக்கச் செய்கிறான்.

சாமத்துக்கு ஒருத்தனாக நான்கு சாமத்திற்கு நான்கு மந்திரியும் அரசனைக் காத்து வருகின்றனர். முதல் சாமம் காக்க வரும் மந்திரி போதவாதித்தனுக்கு அவ்வூர் பத்திரகாளியின் அழுகுரல் கேட்கிறது. அவன் சென்று விசாரிக்கையில் மன்னனுக்கு வருகின்ற துன்பங்கள் பற்றி அறிகிறான். அத்துன்பங்களைத் தன் மதி நுட்பத்தால் நீக்கும் முயற்சியில் ஈடுபடுகிறான்.

பள்ளியறையில் அரசனுடன் துயிலும் அரசியைப் பாம்பு தீண்ட வருகையில் போதவாதித்தன் வாளால் வெட்டுகிறான். அப்போது அரசியின் மார்பில் விஷத்துளி படவே மந்திரி அதனைத் தன் சுண்டு விரலால் நீக்குகிறான். கண்விழித்த அரசி அரசனிடம்

மந்திரியின் நடத்தை குறித்துத் தெரிவிக்கிறாள். அரசனும் சினம் கொள்கிறான்.

அடுத்த சாமம் காக்க வரும் மந்திரி போத சந்திரனிடம் அரசன் போதவாதித்தனின் செயல்பற்றிக் கூறுகிறான். உடனே போதசந்திரன், வேடனொருவன் தனக்கு நன்மை செய்த நாயை ஆராயாமல் கொன்ற கதையைக் கூறித் தீர விசாரித்தே எந்தக் காரியத்தையும் செய்ய வேண்டும், மந்திரிபேரில் குற்றமேதும் இருக்காது என்பதாகக் கூறிச் செல்கிறான்.

மூன்றாம் சாமம் காக்க வருகின்ற போதவியாதரனிடமும் மன்னன் போதவாதித்தனின் செயல் பற்றிச் சொல்கிறான். போத வியாதரன் பிராமணி ஒருத்தி தன் குழந்தையைப் பாம்பிடமிருந்து காத்த கீரிப்பிள்ளையைப் பொறுமையின்றிக் கொன்ற கதையை எடுத்துக் கூறி எதையும் ஆராய்ந்து செய்தல் வேண்டுமென்கிறான்.

நான்காம் சாமம் காக்க வருகின்ற போதவிபீஷணனிடமும் மன்னன் நடந்தவற்றைச் சொல்கிறான். அவன், பார்வையற்ற ஒருவனுக்கு உதவி செய்த செட்டியை ஆராயாமல் கொல்லத் துணிந்த அரசன் பற்றிய கதையை எடுத்துக் கூறி அறிவுரை பகர்கிறான்.

மறுநாள் காலையில் அரசவையில் இரவு நடந்தவற்றைக் கூறுகிறான், மன்னன். மனுநீதி

என்னும் மந்திரியானவன், பிராமணன் ஒருவனுக்குப் பேருதவி புரிந்த கிளி பற்றிய கதையை எடுத்துக்கூறி ஆராய்ந்து எச்செயலையும் செய்ய வேண்டும் என்கிறான்.

போதவாதித்தன் நடந்தவற்றுக்கான காரணங்களைத் தகுந்த சான்றுகளுடன் விவரித்துத் தான் குற்றமற்றவன் என்பதை உணர்த்துகிறான்.

இறுதியில் மன்னன் ரக்ஷித்தவனை பக்ஷிக்க நினைத்த பாம்பின் கதையைக் கூறி, உதவி செய்த மந்திரி பேரில் சினம் கொண்டமைக்கு வருந்துகிறான். பின்னர் மந்திரிகளுக்குப் பல்வேறு பரிசுகளை அளிக்கிறான். நாட்டில் உள்ள மக்கள் யாவரும் எவ்விதக் குறையுமின்றி என்றும் பதினாறு வயதுடன் வாழ்ந்து வந்தார்கள். இவ்வாறாகக் கதை முடிவுறுகிறது.

### மொழிநடையும் எடுத்துரைப்பும்

தூய தமிழ்நடை, பேச்சுவழக்கு நடை இரண்டும் கலந்த நடையில் நாலுமந்திரி கதையின் எடுத்துரைப்பு அமைந்துள்ளது. நாட்டார் மரபில் வாய்மொழியாகச் சொல்லப்படுவதுபோல் கதை விளக்கம் பெறுகின்றது.

நீண்ட வாக்கியங்கள் பல இடம்பெற்றுள்ளன. மாசமாயி, போயி, நடக்கச்சே, அவருட, பாத்து, வளத்து போன்ற பேச்சு வழக்குச் சொற்களும், கடாக்ஷம்,

விசேஷம், ரக்ஷித்தல், தினம், பக்ஷித்தல் போன்ற வடசொற்களும் கதையில் இடம்பெற்றுள்ளன.

'கதைக்குள் கதை' என்னும் உத்தி சிறப்பாகக் கையாளப்பெற்றுள்ளது. மந்திரிகள் ஐவரும் ஆளுக்கொரு கதை கூறுகின்றனர். இறுதியில் அரசனும் ஒரு கதை சொல்கிறான்.

"எதையும் தீர விசாரித்தே செய்தல் வேண்டும்" என்பதே கதையின் நீதியாக அமைகின்றது.

"கை நீளமென்று பெத்த தாயைக் கழுத்தைப் பிடிப்போமோ? நெருப்பு சின்னதென்று முந்தாணியிலே முடிப்போமா?" எனும் பழமொழி மீண்டும் மீண்டும் இடம்பெறுகின்றது.

தெய்வம் தோன்றிப் பேசுவது, பாம்பு பேசுவது, குறிப்பிட்ட பழத்தைச் சாப்பிட்டால் என்றும் பதினாறு வயதுடன் இருக்கலாம் என்பது போன்ற மீவியல்பு நிகழ்வுகளும் கதையில் இடம்பெறுகின்றன.

**இப்பதிப்பு முறை**

இப்பதிப்பு 'நாலு மந்திரி கதை' என்னும் தலைப்பிலான ஓலைச்சுவடியைப் பின்பற்றி அமைகின்றது. ஓலைச்சுவடிக்கும் தாள் சுவடிக்குமான வேறுபாடுகள் அடிக்குறிப்பிலும் பின்னிணைப்பிலும் தரப்பட்டுள்ளன.

தொடக்கத்தில் சுவடிப் பதிப்புகள் சந்தி பிரிக்காமலும், குறியீடுகள் அமைக்காதும் வெளியாயின. பின்னர் நிறுத்தக் குறிகளைப் பதிப்பு நெறிகளில் பயன்படுத்தத் தொடங்கினர். மர்ரே பதிப்புகளில் இம்முறைகள் பெரிதும் பின்பற்றப்பட்டன. பின்னர்த் தொடர்ந்து பலர் இதனைப் பின்பற்றினர். 1875-ஆம் ஆண்டில் பூமகள் விலாசம் அச்சுக்கூடத்தார் வெளியிட்ட 'நிட்டானுபூதி' என்னும் நூலில் முதன் முதலாகக் குறியீடுகளைப் பதிப்பில் அமைப்பது பற்றிய செய்திகள் தரப்பட்டுள்ளன. அவ்வகையில், சுவடியில் உள்ளவற்றைப் பத்திகளாகப் பிரித்தும் நிறுத்தக் குறிகள் இட்டும் பதிப்பிக்கும் முறை 'நாலுமந்திரி கதை' எனும் இப்பதிப்பில் கையாளப்பெற்றுள்ளது.

**நன்றியுரை**

சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ் இலக்கியத் துறையில் 2004-2005 கல்வியாண்டில் நடத்தப்பெற்ற **'சுவடியியலும் பதிப்பியலும்'** - பட்டயக் கல்வி பயில்வதற்கு இடமளித்து, அப்பயிற்சியின் நிறைவாக இப்பதிப்பேடு உருவாவதற்குத் துணையாகவும் அமைந்த என் நெறியாளர் பேராசிரியர் வீ. அரசு அவர்களுக்கு என் நன்றி என்றும் உரியது.

எனக்குச் சுவடிப் பயிற்சியளித்த பேராசிரியர்கள் முனைவர் ய. மணிகண்டன், புலவர் ப.வெ. நாகராசன்,

முனைவர் கி. ஜெயகுமார், முனைவர் சு. நிர்மலாதேவி ஆகியோருக்கும் கிரந்த எழுத்துப் பயிற்சி அளித்த பேராசிரியர் சீனிவாசன் அவர்களுக்கும் என் நன்றி.

இப்பதிப்பிற்காக 'நாலு மந்திரி கதை' எனும் தலைப்பிலான ஓலைச்சுவடியைப் படியெடுக்க அனுமதி வழங்கிய அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகக் காப்பாட்சியர் முனைவர் சு. சௌந்தர பாண்டியன் அவர்களுக்கும் என் நன்றி.

இப்பதிப்பேடு நன்முறையில் உருவாகப் பல்வகைகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் நன்றி.

க. சிவசுப்பிரமணியன்

சென்னை.
08-07-2005

# நாலு மந்திரி கதை

அளகாபுரியென்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்துக்கு அளகேந்திரனென்றொரு ராசா. அந்த ராசாவினுட பட்டணம் எப்படியிருக்குமென்றால் இரும்புனாலே கோட்டையும் வெங்கலக் கோட்டையும் வெள்ளிக் கோட்டையும். இந்தப் பிரகாரம் ஏழு சுத்துக் கோட்டையினுள்ளே அந்த ராசாவினுட கோவில் எப்படியிருக்குமென்றால் தொளாயிரத்துத் தொண்ணூத்து ஒன்பது வாசலும் அதனடுவே அளவில்லாத உப்பரிகையும். அந்த வாசலுக்கு வாசல் அன்ன கொடியும் சொர்ண கொடியும் அனுமகொடியும் மகர தோரணமும் கட்டிப் பஞ்சவர்ணகொடியும். மனுநீதி உடனே அதர்மம் அநியாயமில்லாமல் ஆறிலொன்று கடமை கொண்டு அரசாட்சி மணிக்கட்டு எனுமிடத்தில்.

அந்தப் பட்டணத்தில் செட்டி வர்த்தகரும் மகுட வர்த்தகரும் அரசர், மக்கள், மந்திரி பிரதானியள், பிள்ளைமார், கன்னடியர், வங்காளர், கொங்கணர், தெலிங்கர், பிராமணர், கருமார், தட்டார், மத்துமுள்ள ரதகெசதுரகதிபதிரதிகள், அரதேசி, பரதேசி, களவு கன்னமிட்டவர், கைபறித்திட்டவர் இப்படிக்கொத்த பேர்கள் எல்லாம் நிறைந்து இருப்பார்கள்.

நவகோடி திரவியம் தேடினவர் அரமனை மாடமாளிகையின் பேரிலே பொன்னாலே குடமும் வெள்ளியினாலே குடமும் வச்சிருப்பார்கள். அதில்லாமலே தெருவுக்குத் தெரு இப்படிக்கொத்த பேர்களாக அறுபதினாயிரம் பேர்கள் குடங்கள் வைத்து அவரவர் உப்பரிகை மேடை மேலே அன்னகொடி சேர்ணகொடி மகர தோரணம் கட்டிக் கொண்டிருப்பார்கள். அந்தப் பட்டணம் அலங்காரம் மகாமேருவும் கயிலாசகிரிபோலேயிருக்கும்.

அதின் பேரில் ராசாதிராசன் மனுநீதி நீங்கானாக ஆறிலொரு கடமை வாங்கி அசையா மணிக்கட்டு

ராச்சிய ஆக்கினையாய் ராச்சியபாரம் ஆண்டு வருகிற நாளையிலே தினம் தினமும் அளகேந்திர ராசாவினிட கொலுமுகத்திலே தெரிசனம் பண்ணுகிற ராசாக்கள் மகுடவர்த்தகர் கிரீடம் பெற்ற பேர்கள் வந்து தெரிசனம் பண்ணுகிற போது கிரீடத்தோடு கிரீடம் பட்டு தினமும் முக்கால் பொன் உதிரும்.

அப்படி வீராதி வீர ராசாக்கள் ராச்சியபாரம் ஆண்டு வருகிற நாளையிலே, அந்தப் பட்டணத்திலே ஒருத்தன் ஒட்டகந் தனியா போயி ஒரு மாசமாயி தேடிக்கிட்டிருந்தான். அந்த ராசாவின் முகத்திலே போயி சொல்லவும் சமூகம் கிடையாமல் திரிகிறான்.

அப்போது மதுராபுரி என்றொரு பட்டணத்துக்கு மதுரேசனென்றொரு ராசா. அந்த ராசாவின் வாசலிலே போதவாதித்தனென்றும் போதசந்திரனென்றும் போதவியாதரனென்றும் போதவிபீஷணனென்றும் இப்படி நாலு மந்திரிமாருண்டு. அந்த மந்திரிமாரும் அந்த ராசாவினுடனே குணதோஷமாக வலசையோடுங்கூட அளகாபுரிப் பட்டணத்தை

நோக்கி வருகிறபோது நடுவழியில் ஒட்டகமங்கே நடந்து போயிருந்தது.

அந்த ஒட்டகம் நடந்து போன அடியைப் பாத்துப் போதவாதித்தன் சொல்லுவான், "அந்த ஒட்டகத்துக்கு ஒரு கால் முடம் "என்றான்.

போதசந்திரன் பாத்து, "அந்த ஒட்டகத்துக்கு ஒரு கண் குருடு "என்றான்.

போதவியாதரன், "அந்த ஒட்டகத்து வால் கூழை"எனறான்.

போதவிபீஷணன், "அந்த ஒட்டகம் சூலாயிருக்கும்" என்றான்.

இப்படி நாலு மந்திரி நாலு குறியிடம் சொல்லிக்கொண்டு வருகிறபோது அந்த ஒட்டகத்தைப் போக்கடித்தவன் இவர்கள் சொல்லி வருகிறதைக் கேட்டு அவர்கள் கிட்டே போயி நின்று, "அண்ணமாரே! ஒரு ஒட்டகம் வழியிலே

காணீர்களோ?" என்று கேழ்க்கும் போது போதவாதித்தன் சொல்லுவான், "உன் ஒட்டகத்துக்கு ஒரு கால் முடமல்லவோ? என்றான்."

போதசந்திரன் கேட்டு, "அந்த ஒட்டகத்துக்கு வலது கண் குருடு அல்லவோ?" என்றான்.

போதவியாதரன் சொல்லுவான், "அந்த ஒட்டகத்துக்கு வால் கூழையல்லவோ?" என்றான்.

போதவிபீஷணன், "அந்த ஒட்டகத்துக்கு வயிறு சூல் அல்லவோ?" என்றான்.

அப்போ ஒட்டகத்தைப் போக்கடித்தவன், "தேவரீர்! நீங்கள் சொன்ன அடையாளமெல்லாம் உள்ளதுதான். அந்த ஒட்டகம் எங்கே நிற்குது?" என்று கேட்டான்.

நாங்கள் ஒட்டகத்தைக் கண்டதில்லையென்று சொன்னார்கள். நீங்கள் காணாமல் இந்த அடையாளமும் சொல்லக் காரியமேதென்று அந்த

ஒட்டகத்தைக் களவு செயிதவர்கள் நீங்களென்று மந்திரிமார் நாலுபேருக்கும் ஒட்டகம் போக்கடித்தவனுக்கும் வெகுதர்க்கமாயி அடிபிடியோடு கூடி நாலு பேரையும் கூட்டிக் கொண்டு அளகேந்திரனெங்கிற ராசாவின்கிட்ட வந்து, ஒட்டகம் களவு செய்த பேர்களைப் பிடித்து வந்தேனென்று ராசாவுக்குச் சொன்னான்.

அப்போது அளகேந்திரனெங்கிற ராசா இந்தக் கள்வரை அழைப்பிச்சு, "நீங்கள் ஒட்டகம் களவு செய்தது ஏது? " என்று கேட்டார்கள்.

"நாங்கள் ஒட்டகம் களவு செய்ததில்லை" என்று சொன்னார்கள்.

ராசா நாலு மந்திரியும் அழைச்சு, "ஒட்டகத்துக்கு அங்கே அடையாளம் சொன்னதேது? அந்த ஒட்டகத்தைக் காணோமெங்கிறதேது?" ராசா கேட்டார்.

அப்போ மந்திரிமார் சொல்லுவார், "நாங்கள் ஒட்டகத்தைக் கண்டதில்லை. அதினுட நடத்தை கண்டு சொன்னோம்" என்று சொன்னார்கள்.

அதுக்கு ராசாவானவர் மந்திரிமாரைப் பாத்து, "அதினுட நடத்தையைப் பாத்துச் சொன்ன விபரத்தை எப்படி?" என்று கேட்டார்.

அப்போ போதவாதித்தன் சொல்லுவான், "அந்த ஒட்டகம் நடக்கச்சே கால் தரையிலே ஊனவில்லை ஆகையினாலே முடமென்று சொன்னேன்"என்று சொன்னான்.

போதவியாதரன் சொல்லுவான், "அந்த ஒட்டகம் நடக்கச்சே புல்லிலே ரத்தம் சிந்தியிருந்தபடியினாலே வாலிருந்தால் வீசிக்கொள்ளுமே ஆகையினாலே வால் கூழையென்று சொன்னேன்" என்று சொன்னான்.

போதவிபீஷணன் சொல்லுவான், "பின்னங்கால் ரெண்டும் அழுத்தமாய் மெறித்திருந்தப்படியினாலே வயறு ரொம்ப சூலென்று சென்னேன்"

போதசந்திரன் சொல்லுவான், "வலது காலில் அடியிலே ரத்தம் விழுந்தப்படியினாலே வலது கண் குருடென்று சொன்னேன்."[1]

இப்படி மந்திரிமார் நாலுபேரும் ராசாவின் முன்னாலே அறிக்கை சொல்லினார்கள். அப்போ அளகேந்திரனெங்கிற ராசா சந்தோஷப்பட்டு இந்த மந்திரிமாருட யோசினையும் புத்தியும் அவருட அழகும் அறிவும் ஞானமும் கல்வியும் சவிந்திரியமும் நடை உடைபாவனையும் சுத்த பிரிய அலங்கார அஸ்தமும் இந்தப் பூலோகத்திலே பூமியின் கண்ணிலே இருக்கிற பேருக்கு இப்படி வாராதென்று தன் மனதிலே அதிசெயப்பட்டுக் கொண்டு ஒட்டகத்தைப் போக்கடித்தவனுக்கு ஒரு அன்னூறு பொன்னும் குடுத்து அவனைப் போகச் சொல்லி, இந்த மந்திரிமார் நாலு பேரையும் பாத்து அழைத்துத் தன்னுட வாசல்

1. போதசந்திரன் அந்த ஒட்டகம் வலதுபுறம் புல்லொதுங்கி மேய்ந்து போயிருந்தது. இருபுறமும் சாலையிருக்க ஒருபுறமே போயிருக்கிறபடியினாலே இதுக்கு வலதுபுறம் கண்ணு பொட்டையென்று சொன்னேன் என்றான்.

படிக்கட்டுக்குத் தளகர்த்தராகச் சகல காருபாரும் கட்டளை பண்ணிப் பள்ளியறை பாரி படுக்களம் இது முதலாகியதும் விசாரிக்கச் சொல்லி நிலவரம் பண்ணிவச்சுச் சகல ஆடை ஆபரணமும் அய்சுரியமும் கட்டளையிட்டு அரமனை முதலாகியதெல்லாம் கட்டிவச்சுக் குடுத்து நீங்கள் நாலு பேரும் நம்முட வாசலுக்குக் காரியகர்த்தனென்று முத்திரை மோதிரமும் ரத்தினக் கம்பளியும் கட்டளையிட்டுக் கனக பல்லக்கு குடுத்து அனுப்பிவிச்சார்.

அந்தப் படிக்கு மந்திரிமார் ராசாவுக்குப் புத்தி யோசினையும் சொல்லிக் கொண்டு சகல காரியத்துக்கும் விசாரித்துக் கொண்டு நீதிபலங்கானாக ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டு வருகிற நாளையிலே இந்த நாலு மந்திரிமாரும் ராத்திரிகாலம் ராசாவுக்கு அமடு வருகுதென்று அதனை யறிந்து குறித்துக் கொண்டு சாமத்துக்கொரு ஒருத்தனாக நாலு சாமத்துக்கு நாலு மந்திரியும் பள்ளியறை காத்து வருவார்கள்.

இப்படி வருகிற நாளையிலே ஒருநாள் போதவாதித்தன் முதல் சாமம் காக்க வேணுமென்று பிறப்பட்டுப் பட்டணம் சுத்தி வருகிறபோது ஊருக்கே வடக்கே ஒரு பத்திரகாளி கோவிலுண்டு, அந்தக் கோயிலிலே அழுத குரல் சத்தமாயிருந்தது.

அந்தக் குரல் சத்தம் கேட்டுப் போதவாதித்தன் அந்தக் காளி கோயிலிலே ஒரு காலமுமில்லாதது ஏதென்று கேட்டு வெகு விசாரமிட்டுக் காளி கோயிலிலே போயி திருவாசல் முகப்பிலே போயி நின்று போதவாதித்தன் சொல்லுவான், "ஆரடி அம்மே! அங்கே அழுகிறவள்?" என்று கேட்டான்.

அந்தச் சத்தம் கேட்டுப் பத்திரகாளி அழுகிறதை நிறுத்தி, "நீ யாரிடா கேழ்க்கிறவன்?" என்று கேட்டாள்.

"நான் இந்தப் பட்டணத்து ராசாவின் வாசல் முதல் மந்திரி போதவாதித்தன்" என்று சொன்னான்.

அப்போ அம்மன் திருவிளம் பத்தினது, "வாரும் பிள்ளை, போதவாதித்தனே! நான் தான் பத்திரகாளி அழுகிறேன்" என்று சொன்னாள்.

அப்போ மந்திரியெங்கிற போதவாதித்தன் சொல்லுவான், “அம்மா! தாயே! வடபத்திரகாளி! மகமாயி! ஈசுபரியே! நீ அழுகிறது ஏன்?” என்று கேட்டான்.

“நான் அழுகிறது உன்னாலே ஆகுமோ?” என்று கேட்டாள்.

அப்போ போதவாதித்தன் அடிபணிந்து தோத்திரம் பண்ணி, “லோக மாதாவே! உன்னுடைய அனுக்கிரகம் பரிபூரண கடாக்ஷமாக என்னிடத்தில் மனப்பூரணமாக நிறைந்திருந்தால் அடியேனாலே ஆகாமல் என்ன?” என்று சென்னான்.

ஆனதால், “போதவாதித்தன் மந்திரியே! சொல்லுகிறேன் கேளும். அளகேசனாகிய மகாராசா ராசநீதி பயங்கானாக ராச்சியபாரம் தாங்கி நமக்கு நித்த பூசையும் நிவத்தியமும் மாறாமல் நடத்திவிச்சுத் தன்னுட தெயிவமாகப் பாவித்துக் கொண்டு தினம் கட்டளையாக மூணு திரம் நம்முட சன்னதியில் வந்து தெரிவித்துக் கொண்டிருக்கிற ராசாவுக்கு அமடு

வந்ததென்டு வெகு துக்கமாயி அழுதோம் பிள்ளாய்!" என்று அம்மன் திருவளம் பத்தினபோது போதவாதித்தன் கேட்டுக் கலங்கி மதிமயங்கி வெகு துக்கமாயி அம்மன் பாதத்திலே விழுந்து "வருகிற அமடுகளை அம்மா! உன்னுடைய திருவிள கடாக்ஷத்தினாலே அந்த அமடுகளை விலஃகித்தா" என்றும், "படிந்து வருகிற ஆபத்துகளெல்லாம் அமடுகளையெனக்கு மனமகிழ்ந்து உண்மையாய்த் திருவிளம் பத்தவேணும்" என்று கேட்டான்.

ஆனதால், "சொல்லுகிறேன் கேளும் போதவாதித்தனே! நாளை சூரிய உதைய காலத்திலே நம்முடைய தேசத்திலிருந்து வருகிற அந்த நெல்லைக் குத்திச் சமைக்கச் சொல்லுவார், ராசாவானவர். அந்த நெல்லு விளைஞ்சு இருக்கிறபோது சர்ப்பங்கள் விளையாடினவிடத்திலே அந்த நெல்லிலே சர்ப்பத்தின் விஷம்பட்டிருக்கும். அந்த நெல்லு குத்திச் சமைக்கிறதிலே விஷம் அகப்படும். ராசாவுக்குப் படைத்த அமுதிலே முதல் பிடி சாதத்திலே

அகப்படும். அந்த அமடு தப்பினால் மறுபட்டணத்து [1]ராசா கையி காணிக்கையாகப் பணியாரக் குடம்[2] அனுப்பி..... வந்து கண்டவுடனே ராசாவானவர் துறந்து பாப்பார்..... அப்போ அந்தப் பணியாரக் குடத்திலே பொறி அம்பு..... அம்பு பரிந்து கொல்லும், வயத்திலே படும். அப்போ மண்டபமிடிந்து விழும். அந்த அமடு தப்பினால் அதின் பிறகு கொலுவிலே இருந்து கொலு முடிந்த பிறகு ராசாவானவர் ராத்திரிக்கு அரமனையிலே வந்து போசனம் பண்ணிப் பள்ளியறையிலே தேவி உடனே சப்பர மஞ்சத்தின் பேரிலே சயனித்து நித்திரை செய்யிறபோது, அதே சப்பர மஞ்ச வழியாகச் சர்ப்பம் வந்து ராசாவைத் தீண்டும். இந்த மூணு அமடும் தப்பினால் நம்முட ராசாவுக்கு நூத்திருபது வயசு உண்டு " என்று அம்மன் திருவிளம் பத்தினாள்.

அந்தச் சேதியெல்லாம் மந்திரி கேட்டுக் கொண்டு அம்மனையும் அனுப்பிவிச்சுக் கொண்டு போதவாதித்தனும் வந்து விட்டான்.

1. விஜயநகரப் பட்டிணம்
2. நெல்பொரிக் குடம்.

மறுநாள் சூரிய உதையத்திலே நெல்லுப் பொதிகள் வந்தது. அது ராசா வந்து பாத்து, "இன்னைக்கு நல்ல தினமாயிருக்குது. சாயங்காலம் நெல்லு குத்தி ராத்திரிக்குப் போசனம் பண்ண வேணும்" என்று சமைக்கச் சொல்லிக் கட்டளையிட்டார்.

அந்த நாழிக்கு மறுபட்டணத்து ராசா பணியாரக் குடம் கையி காணிக்கையாக அனுப்பிவிச்சான். அந்தச் சேதி ராசாவானவர் கேட்டு, அந்தக் கையி காணிக்கை அழைப்பித்துப் போயி பேட்டி ஆகிறபோது போதவாதித்தன் சொல்லுவான். "ராசாவுக்குப் பேட்டி ஆகிறது காரியமல்ல" என்று அரமனைக்குள்ளே ராசாவைப் போகச் சொன்னான்.

அந்த ராசாவானவர் அரமனைக்குள்ளே போயி இருந்தார். அப்போது, 'இதிலே ஒரு அதிசயமுண்டு' என்று சொல்லிப் போட்டுத் திரும்பி வந்து, முன்னாலே ஒருவன் அரமனைக்குள்ளேயிருந்த..... திருடினவனைப் பிடித்து வந்து விலங்கிலே போட்டு இருந்து, அவனை

விலங்கை விடுவிச்சுக் கூட்டி வந்து, அவனுக்குச் சகலமான ஆடை ஆபரணமெல்லாம் அணிந்து கொள்ளச் சொல்லி, அவனை ராசாவே என்று பேருமிட்டுக் கொலு மண்டபத்திலே வந்திருக்கப் பண்ணிவிச்சு, அந்தக் கையி காணிக்கை அழைப்பிச்சுச் சந்திச்சுக் கொள்ளச் சொன்னார்கள்.

அந்தப்படிக்கு சந்திச்சுக் கொள்ளுமிடத்துப் பொறி அம்பு மண்டபத்திலே பட்டு மண்டபம் இடிந்து விழுந்து விலங்கிலே கிடந்தவன் செத்தான்.

அந்த அமடு தப்பின பிறகு, ராத்திரி காலமான போது புதியது போசனம் பண்ண ராசா கொலு முடிந்து அரமனைக்குப் போற போது மந்திரி ஆகிற போதவாதித்தனும் கூடவே போனான். அப்போது ராசா போசனத்தராய் இருக்கச்சே போதவாதித்தனையும் கூடவே போசனத்தராய் இருக்கச் சொன்னார். அப்போ போதவாதித்தன் போசனம் தேவலையென்று சொல்லிவிட்டார்.

அப்போ ராசா போசனம் சாப்பிடுகிற வேளையிலே, "அடியேனுக்கு முதல் பிடி அமுது தர வேணும்"என்று போதவாதித்தன் கேட்டான்.

அப்போ ராசா சந்தோஷப்பட்டுக் கூட ரெண்டு பிடி சாதம் கூட்டி மூணு பிடியாயி குடுத்தார். அந்த மூணு பிடி அமுதத்தை வாங்கிப் பத்திரமாக வச்சுப்போட்டு ராசாவின் அரமனையில் பள்ளியறை சப்பர மஞ்சத்தின் கீழே ஒளிந்திருந்தான்.

ராசா போசனம் பண்ணிப் பள்ளியறையில் சப்பர மஞ்சத்தின் பேரிலே ராசாவும் தேவியாரும் பள்ளி கொண்டு தெளிவிலாசமாக நித்திரை பண்ணுகிற சமையத்திலே சப்பர மஞ்சத்தின் பேரிலே சங்கிலி வழியாக நல்ல நாக சர்ப்பம் வரச்சே, மந்திரி ஒளிந்திருந்தவன் கண்டு தன்னுட மந்திர வாளினாலே ரெண்டு துண்டாக வெட்டி எடுத்து மேலே கட்டிலின் பேரிலே போட்டான். அப்போது அந்தச் சர்ப்பத்தினிட விஷம் தெறித்து ராசாவின் தேவியார் ஸ்தனத்தின் பேரிலே விழுந்தது.

அப்போது போதவாதித்தன் வெகு விசாரப்பட்டு, 'ராசாவினுட அமடு விலக்கினது பாராமல்..... தேவி யாருக்கு அமடு வந்ததே இது எப்படி?' என்று யோசனை பண்ணித் தாயாகிற முலையைப், பிள்ளையானது கையினாலே அல்லவோ பிடித்துப் பால் குடிக்கும். அத்தன்மை போல நமக்குத் தாயல்லாமல் வேறில்லை என்று தன்னுட சுண்டு விரல் நிகத்தினாலே விஷத்தை எடுத்து மாத்திப் போட்டு, அந்த விரலையும் அறுத்துச் சர்ப்பத்தினுடனே கூட போட்டுவிட்டான்.

வெளியிலே பிறப்பட்டு வருகிற சமையத்திலே ராசாவின் தேவி முழித்துப் பாத்து, "ஆரடா?" என்று கேட்டாள்.

அப்போ, "அடியேன் போதவாதித்தன்" என்று சொல்லிப் போட்டு வந்துவிட்டான்.

அதின் பிறகு ராசாவின் தேவியும் மிகுதியும் கஷ்டப்பட்டு ராசாவை எழுப்பி "போதவாதித்தன்

வந்து நிகத்தினாலே கிள்ளி எழுப்பினான். அவனுடனே ரேகையும் பாரும்" என்று அவளுட ஸ்தனத்தின் குறியைக் காண்பிச்சாள்.

அப்போ ராசாவுக்கு மிகுதியும் கோபம் பிறந்து இருக்கிற வேளையிலே, இரண்டாம் சாமம் காக்கிற மந்திரியிடம், "போதசந்திரனே! போதவாதித்தன் செயித சேதியைக் கேட்டாயோ? நாமும் நம்முட தேவியுமாக நித்திரை பண்ணுகிற சமையத்திலே போதவாதித்தன் வந்து நம்முட தேவியாருட ஸ்தனக் குறியைத் தொட்டுப் போனான்" என்று சொன்னார்.

அப்போ போதசந்திரன் கேட்டு, "சுவாமி போதவாதித்தன் அப்படிச் செய்யிறவனல்ல. இது வுமல்லாமல் கையி நீளமென்று தாயைக் கழுத்தைக் கட்டுவோமோ? நெருப்பு சின்னதென்று முந்தாணி முடிப்போமோ?[1] அப்படிச் செய்யிறவனல்ல. ஏது நிமித்தியமோ தெரியாது. அது தீர விசாரித்துக் கொண்டு ஒரு காரியம் செய்ய வேணும். அப்படித் தீர விசாரியாமல்

1. ஆஞ்சு ஒஞ்சு பார்க்காத காரியம்தான் சாகக்கிடவது என்று ஒரு வசனம் உண்டு.

செய்யிற காரியத்துக்கு ஒரு கதை உண்டு. சொல்லுகிறேன், கேளுமய்யா!" என்று சொல்லுவான்.

"அது எப்படி? சொல்லும்" என்று ராசா கேழ்க்க, அப்போ "உத்திரவீரன் என்றொரு வேடனுண்டு.[1] அவனை அரமனையார் பெரும்பிடி பிடித்து ஆயிரத்தன்னூறு பொன் வகுப்பார்கள். அதுக்கு அன்னூறு பொன்னுக்குத் தன்னுடைய அவசர நிமித்தியமாக உண்டானதெல்லாம் வித்துச் சேத்தான். மத்த ஆயிரம் பொன்னுக்கு ஒன்றும் வகையில்லாமல், ஒரு நாயை வளத்திருந்தான். அந்த நாயி வெகு அறிவுடையதாயிருக்கும். அந்த நாயைக் கொண்டு போயி, ஒரு செட்டியார் வசம் வச்சு, அந்தச் செட்டியார் நவக்கோடி நாராயண செட்டி,[2] அவனிடத்திலே நாயை வச்சு ஆயிரம் பொன்னும் உத்திரவீரன் வேடன் வாங்கிக் கொண்டு, நாயை அழைப்பித்து, இந்த ஆயிரம் பொன்னும் தேடிக் கொண்டு வருமளவும் செட்டியார்

1. உபலாபுரி என்றொரு பட்டணமுண்டு. அதிலே உத்திரவீரன் என்றொரு வேடனுண்டு.

2. குபேரன்.

எந்த புத்தி சொன்னாரோ அந்தப்படிக்குக் கேட்டுக் கொண்டு நடக்கச் சொல்லிப் போட்டுப் போனான்.

அப்படிச் சிறிது நாள் சென்றபோது, செட்டியார் கப்பலோடு போறவர் நாயை அழைத்து, வீடு வாசல் பத்திரமாகக் கள்ளன் திருடன் வராமல்படி எந்தப்படி உண்டோ அந்தப்படி ராத்திரி பகலும் எச்சரிக்கை தப்பாமல் காத்துக் கொண்டிருக்கச் சொல்லிப் பெண்சாதியை அழைப்பிச்சு நாய்க்கு மூணு வேளையும் வயிறு நிறையப் பாலும் சோறுமாகப் போடச் செல்லி நிலவரம் பண்ணிப் போட்டுப் போனான்.

அந்தப்படிக்குச் செட்டியார் வேபாரத்துக்குப் போனது பாத்துச் செட்டியார் பெண்சாதி ஆனவள் ஒரு சோரநாயகனைச் சேத்துக் கொண்டு இருப்பாள். அந்தப்படிக்குச் சேகரித்துக் கொண்டு இருப்பாள். அந்தப்படிக்குச் சோரநாயகன் செட்டியார் வீட்டுக்கு வர போக இருந்தது கண்ட அந்த நாயி குறிப்பறிந்து கொண்டு, செட்டிச்சியும் அந்தச் சோரநாயகனும் ஒன்றுபடப் படுத்திருந்து பாதி சாமத்திலே இருவரும்

சையயோகமாகக் காரியம் பண்ணி முடித்ததின் பேரிலே இருவரும் முன்னும் பின்னுமாகக் கால் அலம்ப வெளியிலே வருகிறபோது, நாயானது ஒரு பாச்சலாகப் பாய்ந்து சோரநாயகனை மாணியைப் பிடித்துக் கொன்று போட்டது.

அப்போ செட்டிச்சியும் அன்னேரம் ஒருவருமறியாமல் தன் வீட்டுக் கொல்லைப் புறத்திலே குழிவெட்டி அந்தச் சோரநாயகனைப் புதைத்துப் போட்டு[1] நாயின் பேரிலே செட்டிச்சி காத்திரமாக நாய்க்கும் கஞ்சி தண்ணி வாத்து வராமல் தான் மாத்திரம் சமைத்துச் சாப்பிட்டுக் கொண்டு இருப்பாள்.

நாயானது புறத்திலே ஏதாகிலும் அகப்பட்ட மிருகங்களிலே பாத்து அடித்துப் போட்டுச் செட்டியார் வளவை வந்து காத்துக் கொண்டிருக்கும். அப்படியிருக்கிற நாளையிலே, செட்டியார் கப்பல் வர்த்தகம் பண்ணி வெகு தெரவியம் தேடிக் கொண்டு

1. அந்தச் சோரநாயகனைக் கொல்லையிலே நெல் குளியிருந்தது அதுலே பொதச்சுப் போட்டாள்.

நானூறு அன்னூறு கப்பல் சோங்கும் உடனே பிறப்பட்டுத் தன்னுடைய பட்டணத்துக்கு வந்து வளவிலே வந்தான்.

அப்போ அந்த நாயி செட்டியாரைப் பாத்துக் காலிலே விழுந்து உதறிக்கொண்டு கொல்லைப் புறத்திலேயோடும். பின்னே புதைச்ச இடத்திலே மண்ணைப் பறிக்கும். இப்படி நாயி குறிக்கிறதும் விசாரணை கண்டு செட்டியார் மெத்த அதிசெயப்பட்டு நாயின் புறத்தே போனார். நாய் வீட்டின் புறத்தே செட்டியாரைக் கூட்டிப் போயி அந்கக் களவு நாயகனைப் புதைத்திருந்த மண்ணைப் பறித்துப் போட்டு வெளியிலே இழுத்துப் போட்டுது.

அப்போது மெத்த விசாரப்பட்டு நடந்த சமாசாரம் தன் பெண்சாதியிடத்திலே கேட்டு வெகு அதிசெயப்பட்டு இந்த நாய்க்கு நாமென்ன வெகுமதி பண்றோமென்று பாலும்சோறும் போட்டு அந்த ஆயிரம் பொன் முறியும் எடுத்து அந்த நாயின் கழுத்திலே கட்டி, "உங்கள் வேடன் கிட்ட போ" என்று செட்டியார் அனுப்பிவிச்சார்.

அந்த நாயும் வேடனைத் தேடிக்கொண்டு வழிநோக்கிப் போறபோது, வேடனும் ஆயிரம் பொன்னும் சம்பாதித்துக் கொண்டு, "உன்னை உடம்படிக்கை பண்ணும்படிக்குத் தீர்ப்பதும் முன்னே செட்டியாரையும் அறியாமல் முறியும் திருடிக் கொண்டு ஒளிச்சு நீவரக் காரியமென்ன?" என்று வழியிலே நாயைப் பிடித்துக் கழுத்தை அறுத்துப் போட்டான். அதின் பிறகு வேடன் வெகு கிலேசப்பட்டுச் செட்டியாரண்டை வந்து செட்டியாரைக் கண்டான்.

அப்போது வேடனைச் செட்டியார் பாத்து, "உன்னுடைய நாயி நமக்கு வெகு சகாயம் பண்றப்படியினாலே நீ எழுதிக் கொடுத்த முறியும் அந் நாயின் கழுத்திலே கட்டினேன். அந் நாயை அனுப்பிவிச்சோம். அதைக் காணயில்லையோ" என்று செட்டியார் கேட்டான்.

அப்போது இந்தச் சேதி கேட்டு வேடன், 'அறியாமல் முறியும் எடுத்துக் கொண்டு ஒளித்து வருகுதென்று வழியிலே கழுத்தை அறுத்துப் போட்டு

வந்தேன்' என்று மனஸ்தாபப்பட்டு, அந்த நாயி செத்தபோது நானிருக்கக் காரியமேதென்று வேடனும் செட்டியார் முன்பாக வாள்நிறுத்தி அதிலே விழுந்து மடிஞ்சு போனான். அப்போது வேடனுடனே வேடிச்சியும் நாக்கைப் பிடிங்கிக் கொண்டு செத்தாள். அவ்வாறு ரெண்டு பேரும் செத்தபிறகு செட்டியாரும், 'வேடன் முன்னே அனுப்பினபடியினாலே அல்லவோ நாயும் மடிந்தது. அது கண்டு உத்திரவீரனும் அவனுட பெண்சாதியும் இறந்துவிட்டார்கள்' என்று கழுத்தை அறுத்துக் கொண்டு செட்டியாரும் இறந்துவிட்டார். செட்டியார் பெண்சாதியும் செட்டியாருடன் உடன்கட்டை ஏறினாள்.

அப்படித் தீர விசாரியாமல் அவர்களுக்கு அந்த ஆபத்து வந்தது. அப்படி வராதபடிக்கு ஏதொரு காரியமும் தீர விசாரித்துக் கொண்டு ஏதொரு காரியம் செய்யுமய்யா!" என்று போதசந்திரன் சொல்லிப் போட்டு ரெண்டாம் சாமத்தின் பிறகு தன்னுட வளவுக்குப் போனான்.

மூணாம் சாமத்துக்குப் போதவியாதரன் பட்டணமெங்கும் காத்து ராசாவும் பள்ளியறையிலே போறபோது ராசாவானவர் கண்டு, “வாரும் பிள்ளாய், போதவியாதரனே! போதவாதித்தன் செயித காரியம் கேட்டாயோ? நாமும் நம்முட தேவியுமாக நித்திரை போகையில் நம்முட தேவியாருட ஸ்தனத்தைத் தொட்டுப் போனான்” என்று சொன்னார்.

அப்போது போதவியாதரன் தெண்டன் பண்ணி, “சுவாமி! கையி நீளமென்று பெத்த தாயைக் கழுத்தைப் பிடிப்போமோ? நெருப்பு சின்னதென்று முந்தாணியிலே முடிப்போமோ? அப்படிப் போதவாதித்தன் தப்பிதமான காரியம் செய்யிறவனல்ல. எந்தவிதமோ தெரியப் போகாது. அந்தக் காரியம் தீரப் பிராமரியும். பிறகு ஒரு காரியம் செய்ய வேணுமய்யா! அப்படித் தீரப் பிராமரியாமல் செய்யிறதுக்கு ஒரு கதை உண்டு. அந்தக் கதையைக் கேளுமய்யா!” என்று போதவியாதரன் சொல்வான்.

"ஒரு பட்டணத்திலே[1] பிராமணனுண்டு. அந்தப் பிராமணன் தேவிக்குப் பிள்ளையில்லாமலும் வெகு தவம் பண்ணியும் பிள்ளையில்லா மலடி ஆனபடியினாலே ஒரு கீரிப் பிள்ளையை வளப்பார்கள். கீரிப் பிள்ளையை வளத்த முகூர்த்தம் விசேஷமாயி அந்தப் பிராமணியும் ஒரு ஆண்பிள்ளையைப் பெத்தாள். அந்த ஆண் பிள்ளையைத் தொட்டிலிலே போட்டு அந்த ஆண் பிள்ளையும் வளத்து வருவார்கள்.

வளத்து வருகிற நாளையிலே ஒரு நாளாகிற போது, அந்த ஆண்பிள்ளையும் கீரிப்பிள்ளையும் ஒரு பாயிலே படுக்கப் போட்டுத்தன் வீட்டுப் புறத்தே தோட்டத்திலே அரிவாளெடுத்துக் கொண்டு கீரை அறுக்கப் போனாள். அப்போ ஒரு சர்ப்பமானது வந்து அந்தக் குழந்தையைக் கடிக்க வந்தது. அந்தக் கீரிப்பிள்ளை கண்டு தம்பியைக் கடிக்க வந்ததென்று சர்ப்பத்தைத் துண்டமாகக் கடிச்சுப் போட்டுது. வாயிலே ரத்தம் ஒழுகவிட்டுப் புறத்தே தோட்டத்திலே

1. காசிப் பட்டணத்திலே

ஓடிப் பிராமணி காலிலே பிறண்டு விழுந்தது. பிராமணி கீரிப்பிள்ளையைப் பாத்து, ‘என் குழந்தையைக் கொன்றாய்’ என்று கழுத்தை அறுத்துப் போட்டு வீட்டிலே ஓடி வந்து பார்க்கிறபோது பிள்ளை விளையாடுகிறதும் சர்ப்பம் துண்டமாயி கிடக்கிறதும் சொல்ல வந்தது, அது அறியாமல் கீரிப்பிள்ளையைக் கொன்று போட்டோமென்று, கீரிப்பிள்ளையைக் கொன்றவிடத்திலே தன் பிள்ளையை அறுத்துக் கொன்று போட்டுத் தானும் செத்தாள். அப்போது பிராமணன் வெளியிலே போயி திரும்பி வந்து வீட்டிலே பார்க்குமிடத்தில் சர்ப்பம் துண்டமாயி கிடக்கிறதும் தன்பிள்ளை கழுத்தறுத்துக் கிடக்கிறதும் பிராமணி செத்துக் கிடக்கிறதும் பாத்து வெகு விசாரப்பட்டு, ‘இனிமேல் நமக்கென்ன?’ என்று தானும் குத்திக் கொண்டு செத்தான்.[1]

1. அந்தப் பிராமணன் செய்தியறிந்தபின் மிக வேதனைப்பட்டுத் தன் குழந்தையையும் உடைமைகளையும் தன் இனத்தாரிடம் ஒப்படைத்துவிட்டுச் சன்னியாசியாகப் போய்விட்டார்.

அப்படித் தீரப் பிராமரியாமல் நடந்த காரியத்துக்கு அத்தன்மை போலே அப்படிப் போதவாதித்தன் செய்யிறவனல்ல. தீரப் பிராமரித்து ஏதொரு காரியம் செய்ய வேணுமய்யா!" என்று சொல்லிப் போதவியாதரன் வந்துவிட்டான்.

நாலாஞ் சாமத்துக்குப் போதவிபீஷணன் பட்டணமெங்கும் சுத்திப் பாத்துப் பள்ளியறை வாசலிலே வந்தான். அப்போ ராசாவானவர் கண்டு, "வாரும் பிள்ளாய், போதவிபீஷணா! போதவாதித்தன் செயித கதையைக் கேட்டாயோ?" என்றார்.

போதவிபீஷணன் சொல்லுவான், "ஏது?" என்று கேழ்ப்பான். "நாமும் நம்முட பெண்சாதியுமாகச் சப்பிர மஞ்சத்தின் பேரிலே சயினித்துக் கொள்ளச்சே, போதவாதித்தன் வந்து நம்முட தேவியாருடைய ஸ்தனக்குறியைத் தொட்டுப் போனான், பிள்ளாய்! " என்றான்.

அப்போ போதவிபீஷணன் சொல்லுவான், "சுவாமி! கையி நீளமென்று பெத்த தாயைக்

கழுத்தைக் கட்டுவோமோ? நெருப்பு சின்னதென்று முந்தாணியிலே முடிப்போமோ? அப்படிப் போதவாதித்தன் செய்யிறவனல்ல. தீரப் பிராமரித்துக் கொண்டு செய்ய வேணுமய்யா! தீரப் பிராமரியாமல் செய்யிற சேதிக்கு ஒரு கதை உண்டு. சொல்லுகிறேன் கேளுமய்யா!" என்று போதவிபீஷணன் சொல்லுவான்.

"ஒரு பட்டணத்திலே[1] இருந்து ஒரு பண்டாரமும் அவனுட பெண்சாதியும் ரெண்டு பேருமாக மறுபட்டணத்துக்குப் போனார்கள். பண்டாரத்துக்குக் கண் தெரியாது. பண்டாரம் பெண்சாதி எவ்வனமான பெண்ணாயிருப்பாள். இப்படிக் கோல் பிடித்து வழிகொண்டு வருகிறபோது, ஒரு வெள்ளாளன், அதிரூபமானவன், அந்த வழியிலே அவனைக் கண்டு அந்தகன் பெண்சாதியானவள் அவன் பேரிலே ஆசைப்பட்டு, அந்தகனையும் வழியிலே விட்டுப்போட்டு, அந்த வெள்ளாளன் புறத்தே சேந்து விட்டாள்.

1. மிதிலாபுரிப் பட்டணம்

இந்தக் குருடன் வழி தெரியாமல் அன்ன ஆகாரமில்லாமலே அங்கு அஞ்சாறு நாள் காட்டிலே கிடந்தான். அப்படிக் கெடக்கிறபோது ஒரு செட்டியும் அவன் பெண்சாதியும் கூட்டிக் கொண்டு..... வீட்டுக்குப் போறவர்கள் வழியிலே இந்தக் குருடனைக் கண்டு, ஆரென்று கேட்டார்கள்.

"நான் வழி தெரியாமல் அஞ்சாறு நாளாக அன்னம் ஆகாரம் கிடையாமல் இப்படி..... கூட்டிப் போயி ஊரிலே சேத்தால் உமக்குக் கெங்காஸ்தானம் ஆடின பலனுண்டு" என்று செட்டி கையைப் பிடிச்சுக் கொண்டான் அந்தகன்.

அதின் பிறகு செட்டிக்கி இரக்கம் வந்து அவன் கொண்டு வந்த கட்டுசாதமும் குடுத்துச் சாப்பிட்ட பிற்பாடு, அந்தகனைக் கோலைப் பிடித்துக் கூட்டி வரச்சொல்லிப் பெண்சாதி உடனே சொன்னார்.

செட்டிச்சி, "குருடனுக்குக் கோல் பிடிச்சுக் கூட்டி வர ஆவது மாட்டோம்" என்றாள். அப்போ செட்டியார்

பெண்சாதிக்குப் பிரிய வார்த்தை சொல்லி, "இவன் பண்டாரமாகயிருக்க, அந்தகனுமாயிருக்க, இவனைக் கூட்டிப் போயி ஊரில் விட்டால் அந்தப் பலன் நமக்கு அல்லவோ?" என்று சொன்னான்.

பிறகு தன்னுடைய ..... சொன்ன பேச்சு தள்ளுகிறது மரியாதியல்லவென்று அந்தகன் கோல் பிடித்துக் கூட்டி வரச் சொல்லிச் செட்டியார் முன்னே நடக்க, இவர்கள் ரெண்டு பேரும் பின்னே நடந்து வர இந்தப்படிக்கு மூணு பேரும் ஒரு பட்டணம் வந்து சேந்தார்கள்.

ராத்திரி காலம் அந்தப் பட்டணத்திலே இருந்து செட்டியாரும் செட்டிச்சியும் ஒரு இடத்திலே படுத்திருந்தார்கள். அந்தகனும் ஒரு இடத்திலே படுத்திருந்தான்.... செட்டியாரும் செட்டிச்சியும் அந்தகனுடனே பயணம் சொல்லிக் கொண்டு அப்பால் பிறப்பட்டுப் போகையிலே அந்தகன், "அநியாய மென்று இந்தப் பட்டணத்திலே கேள்வி கேழ்ப்பார் இல்லையோ? நானும் என் பெண்சாதியுமாக வரச்சே

ஒரு செட்டி வழியிலே கூடவந்தான். அவன்.... அப்படியிருக்க என்பெண்சாதியைச் செட்டி..... அந்தரத்திலே விட்டுச் செட்டியார் பெண்சாதியைக் கூட்டிக் கொண்டு போறான், அய்யோ!" என்று கூக்குரல் போட்டான்.

அந்நேரத்திலே நாலுபேரும் கூடிக் 'குருடன் பெண்சாதியைக் கூட்டிப் போவதேது?' என்று தலையாரிகளை அழைப்பித்துச் செட்டியைக் கொண்டு போயி வெட்டிப் போடச் சொல்லிச் செட்டிச்சியும்..... கட்டி எரிக்கச் சொல்லி ஒப்பிக் குடுத்தார்கள்.

அப்படித் தலையாரிமார் ஒப்பிக்கொண்டு போகையிலே, இந்தக் குருடன் அப்பாலே இருந்து, நமக்கு ஆபத்து நேரத்திலே கட்டமுது குடுத்துத் தண்ணீரும் குடுத்த அந்த..... வெட்டிப் போடவல்லவோ போறார்கள்...... உடனே சொல்லிக் கொடுத்து அழைச்சுவந்து பட்டணம் சேத்தார்கள். இப்போது நமக்குப் பெண்சாதி வேணுமென்று இப்படிச்

சொன்னோம். அந்தப்படிக்குச் செட்டிச்சியும் நம்முடனே செத்து, செட்டியையும் அடித்துப் பத்து பதினாலு பொன் அபராதம் வாங்கி விடவல்லவோவென்று, செட்டியாரைக் கழுவில் போட்டுச் செட்டிச்சியும் உடன் கட்டை எரிக்கச் சொல்லியும் நாம் விருதாவிலே அல்லவோ இந்த அதிகமான பாவத்தை ஏத்துக் கொண்டோம்" என்று தன்னிச்சையிலே சொல்லிக் கொண்டிருந்தான்.

அந்தச் சமாசாரத்தை ஒருத்தன் கேட்டிருந்து பட்டணத்து ராசா சமூகத்திலே அறிக்கை பண்ணினான். அந்த ராசா இதுகளைக் கேட்டுச் செட்டியாரையும் செட்டிச்சியும் விட்டு விடச் சொல்லிக் குருடனைப் பிடிச்சுக் கழுவிட்டு விட்டார்கள்.

அப்படித் தீரப் பிராமரியாமல் செயிததால் அப்படி.... தீர விசாரித்து ஏதொரு காரியம் நடப்பியுமய்யா!" என்று போதவிபீஷணன் சொல்லிப் போனான்.

அதின் பிறகு சூரிய உதையமாச்சு. கொலு சிங்காரம் பண்ணிக் கொண்டு, கொலுவிலே வந்து முன்னிருந்த மந்திரிமாரை, பிள்ளைமார்..... பிரதானி மார்கள் சகலமான பேரையும் அழைத்துக் கொண்டு, "போதவாதித்தன் செயித கதையைக் கேட்டீர்களோ? நாமும் நம்முட தேவியாருமாகப் பள்ளியறையிலே சயனித்துக் கொண்டிருக்கச்சே போதவாதித்தன் வந்து தேவியார் ஸ்தனக் குறியைத் தொட்டுப் போனான்" என்று சொன்னார், ராசா.

அப்போது முன்னிருந்த மந்திரிமாரிலே மனுநீதி என்றொரு மந்திரி உண்டு. அவன் ராசாவைத் தெண்டன் பண்ணிச் சொல்லுவான். "சுவாமி! போதவாதித்தன் அப்படிச் செய்யிறவனல்ல. எப்படி வந்ததோ தெரியாது. முன் நன்மை செயிது தின்மை விளைந்த கதை ஒன்றுண்டு. அந்தக் கதையைக் கேளுமய்யா!" என்று மனுநீதி உடைய மந்திரி சொல்லுவான்.

"அப்போது ஒரு பட்டணத்திலே ஒரு பிராமணன் ஒரு சின்ன கிளியை வளப்பான். அது பதினெட்டு பாஷையும் கத்திருக்கும். அப்படிக்கொத்த கிளி ஒரு நாளாகிற போது, சூரிய உதையத்திலே வீட்டின் பேரிலே ஏறிக் கொண்டு பறந்தது. அப்போது சிறிது கிளிகள் அந்தரமார்க்கமாயி பறந்து போனது. இந்தக் கிளியானது தன் இனத்தாரைப் பாத்து, "ஒகோ, சாதியாரே! எங்கே போறீர்கள்?" என்று கேட்டுது.

அப்போ கிளியானது சொல்லும் "சமுத்திரத்துக்கப்பாலே ஒரு தீவுண்டு. அந்தத் தீவிலே என்றும் பதினாறு வயதாக இருக்கிறதுக்கு ஒரு மாமரம் உண்டு. அதிலே பழம் தின்னப் போறோம்"என்று சொல்லிச்சுது. ஆனதால், "நானும் கூட வருகிறேன்" என்று இந்தக் கிளியும் போச்சுது.

அந்தப்படிக்கு, அந்த மாமரத்திலே பழுத்திருக்கிற பழத்தைப் போன கிளிகளெல்லாம் சனத்துக்கொரு பழம் சரியாக இருந்தது. சனத்துக்கொரு பழம் கிளிகள் தின்றது.

அதிலே இந்தக் கிளி, "நாமாத்திரம் தின்றதினாலே ஆகிறதென்ன?" என்று, நம்மை வளத்த பிராமணனுக்குக் கொண்டு போயி குடுத்து நாமும் போசிப்போம் என்று கொண்டு வந்து பிராமணன் கிட்ட குடுத்தது.

அந்தப் பிராமணன், "எங்கே இருந்து கொண்டு வந்தாய்?" என்று கேட்டான்.

அப்போது கிளி சொன்னது, "நான் சமுத்திரத்துக்கப்பாலே போயி மாமரத்திலே இருந்து கொண்டு வந்தேன். இந்த மாம்பழத்தைத் தின்றவர்கள் என்றும் பதினாறு வயசாக இருப்பார்கள்" என்று சொல்லிச்சுது.

இந்தச் சேதியைப் பிராமணன் கேட்டு, " நான் அந்தப் பழத்தைத் தின்றதினாலே பலனேது இருக்குது? இந்தப் பட்டணத்து ராசாவானவர் போசித்தால் அவர் என்றும் பதினாறு வயசாக இருப்பார்கள். நாமும் அவருட பட்டணத்திலே அவர் பேரச் சொல்லி முஷ்டி

புகுந்தாலும் பிழைக்கலாம்" என்று ராசாவின் கிட்ட கொண்டு போய்க் குடுத்தான்.

அந்த ராசா, இந்தப் பழத்தை நாமொருத்தனும் தின்றதினாலே ஆகிறதேதென்று நம்முடைய பட்டணத்திலே உண்டாகிய பேர்களெல்லாரும் தின்றால் என்றும் பதினாறு வயசாக இருந்து ராச்சிய பாரம் பண்ணிக் கொண்டிருக்கலாம். இந்தப் பழத்தைப் பயிர் பண்ண வேணுமென்று தோப்புக்காரனை அழைச்சு வரச்சொல்லி இந்தப் பழத்தைத் தோப்பிலே கொண்டு போயி பதிய வைத்து நாளொரு வர்ணம் பொழுதொரு மேனியுமாகப் பயிர் செய்து பரிபாலனம் பண்ணி வரச் சொல்லிக் கட்டளையிட்டார்.

அந்தப்படிக்குத் தோப்புக்காரன் கொண்டு போயி பதிய வைத்துப் பரிபாலனம் செயிதான். அது வளர்ந்து கிளைவிட்டுப் பூத்துக் காச்சதிலே பழம் ஒரு பழம் பழுத்திருந்தது. அந்தப் பழத்தைச் சர்ப்பமானது வந்து முகந்து பாத்துது. அப்போ பழத்தில் விஷம் பாய்ந்து இருந்தது. அத்தை அந்தத் தோப்புக்காரனும் அறியாமலிருந்தான்.

முதல் பழுத்த பழம் ராசாவுக்குக் கையி காணிக்கையாகக் கொண்டு போயி குடுத்து வெகுமானம் பெத்து வருவோமென்று நல்ல சகுனம் பாத்துப் பழத்தை எடுத்து ஒரு தட்டிலே வைத்துப் பட்டுனாலே பொத்திக் கொண்டு தலை மேலே வச்சுக் கொண்டு மேள வாத்தியத்துடனே கூடி ராசாவின் சமூகத்திலே கொண்டு போயி வந்தார்கள்.

ராசா சந்தோஷப்பட்டுத் தோப்புக்காரனுக்கு ஒரு வரிசை நகையும் குடுத்து, சவிளி துப்பட்டியும் பீதாம்பரமும் குடுத்து, சந்தனமும் வெள்ளியும் குடுத்து அனுப்பிவிச்சார்.

அதின் பிற்பாடு ராசாவும் மாம்பழத்தை அதிசெயப்பட்டு, "நாம் சாப்பிட்டதினாலே ஆகிற காரியமென்ன? முதல் பழுத்த பழத்தை நமக்கு உபதேசம் பண்ணிவிச்ச குருக்களுக்குக் குடுக்க வேணும்" என்று குருக்களை அழைப்பிச்சு அவருட கையிலே குடுத்தார்.

அந்தப் பழத்தைக் குருக்கள் வாங்கி அவடத்திலே இருந்து கொண்டு சார்ப்பிட்டார். அந்தப் பழத்தைத் தின்றவுடனே விஷம் தலைமேலிட்டுக் கொண்டு குருக்கள் காலம் கூடிப் போனார். அது ராசாவானவர் கேட்டு, "சிவசிவா! குருதுரோகம் வந்து பலித்துக் கொண்டது" என்று வெகு விசாரப்பட்டு, "அந்தப் பிராமணன் நஞ்சு மாம்பழத்தைக் கொண்டு வந்து குடுத்து நம்மைக் கொல்லவல்லவோ நினைத்தீர்கள்" என்று அந்தப் பிராமணன் கண்ணைக் குத்திப் பறித்துக் கொண்டார்கள்.

அதின் பிறகு சலிப்பாயிபட்டவர்கள் நஞ்சு மாம்பழத்தைத் தின்ன வேணுமென்று சொல்லி உட்கொள்ளுவார்களென்று அந்த மாமரத்தைச் சுத்தி வேலி நட்டு முள்ளு பரப்பிக் கட்டிக் காவல் மனுஷரை வைத்துக் கட்டளையிட்டார்கள்.

அதின் பிறகு பிராமணன் வளவிலே வந்து, "இந்தக் கிளி அல்லவோ நஞ்சு மாம்பழத்தைக் கொண்டு வந்து குடுத்து இத்தனை செய்தது" என்று,

'நாசமான காலத்துக்கு விபரீத புத்தி' என்று அறியாமல் கிளி கொண்டு வந்து இந்த வினையானத்தைக் கொண்டு வந்து விட்டுதென்று வெகு விசாரப் பட்டுக் கிளியைப் பிடித்துக் கழுத்தை முறிச்சுக் கொன்று போட்டான்.

அதின் பிறகு மறுவருஷம் பூத்துக் காய்த்துக் கொம்புலே பழுத்து விழுந்த பழம்..... ஆயிரம் பழுத்து உதிர்ந்த பழம் நாலு கூடை ஆறு கூடை அனேகம் பழம் விழுந்து கிடக்குது.

அந்தப் பட்டணத்திலே ஒருவனுக்குத் தொண்ணூறு வயசு சென்ற கிழவி, அவள் மருமகளுடனே சண்டை போட்டுக்கொண்டு, மருமகளாயிருக்கிறவள் சொல்லாத வார்த்தைகளும் சொல்லிவிட்டாளென்று மாரியாகிய கிழவி, 'நாம் இந்த வார்த்தையைக் கேட்டு இனிமேல் சீவனை வச்சிருக்கக் கூடாது. நச்சு மரத்தண்டையிலே பறிச்சு மாம்பழத்தைச் சாப்பிட்டுச் செத்துப் போவோம்' என்று மரத்தடியில் வந்து காவல்காரனையும் காணாமல் வேலி

துறந்து உள்ளே புகுந்து அந்த மாம்பழத்தைச் சாப்பிட்டாள்.

சாப்பிட்ட உடனே நரைமயிரெல்லாம் நீங்கிப் போயி பதினாறு வயசு சென்ற பால குமாரத்தியாக..... வர்ணமாக பெண்ணாக நின்றாள்.

அன்னேரத்திலே மருமகளானவள் மாமியாரைக் கோபத்தின் பேரிலே வெகு வார்த்தை உதாசினம் சொல்லிப் போட்டோம். அதனாலே எங்கேயாகிலும் போயி செத்துப் போகப் போறாளென எங்கும் சுத்திப் பாத்துத் தேடியும் காணாமல் நச்சு மரத்தண்டையிலே வந்து பார்க்கிற போது, அந்தக் கிழவியாகிய வண்ணாத்தி பதினாறு வயசு சென்ற பால குமாரத்தியாயி நிற்கிறவளைக் கண்டு, "ஒரு கிழவி வந்தாளா?" என்று கேழ்க்க, அப்போ, "நாந்தான் கிழவி" என்று சொன்னாள்.

"நீ சிறுபெண்ணாக இருக்கிறவளை நீ கிழவி என்று சொல்லுவதேது?" பின்னும், "அந்தக் கிழவியைக் கண்டாயோ?" என்று கேட்டாள்.

"அப்படி அல்ல, இந்தப் பழத்தை எடுத்துச் சாப்பிட்டேன். ஆனபடியினாலே இப்படி சுருபமானேன்" என்று சொன்னாள்.

அந்த வார்த்தையைக் கேட்டு நாலு பேருக்கும் வெளிச்சமாயி அங்கிங்கே சொல்லிலே நிசமாயி கேட்டு வண்ணாத்தி மாமி மருமகள் இருவரையும் அழைத்துக் கொண்டு போயி ராசாவின் முன்னே விட்டார்கள்.

அப்போ அந்த ராசா பாத்து, "ஏது?" என்று கேழ்க்க வண்ணாத்தி, "என் மருமகளுடனே சண்டை போட்டுக் கோவமாய் இந்த நச்சு மாம்பழத்தைச் சாப்பிட்டுச் செத்துப் போவோமென்று போயி காவல் காரனையும் காணாமல் ஒளிச்சுப் போயி அந்தப் பழத்திலே ஒரு பழத்தை எடுத்துச் சாப்பிட்டேன். அதின் பிறகு இப்படி சுருபம் வந்தது" என்று வண்ணாத்தி சொன்னாள்.

அதின் பிறகு அந்த ராசா அவடத்திலே இருக்கிறபேரை எல்லாம் அழைத்து இந்தப்

பழத்தையெல்லாம் எடுத்து வரச்சொல்லி அந்தப் பட்டணத்திலே கிழவன் கிழவியாக இருக்கிற பேரையெல்லாம் அழைப்பிச்சு செனத்துக்கொரு பழம் குடுத்தார். அவர்கள் அந்தப் பழத்தைச் சாப்பிட்டவுடனே சகலமான பேரும் பதினாறு வயசு சென்ற பால பிராயமானார்கள்.

அப்போ ராசா சொல்லுவார், "அய்யோ! அந்தப் பிராமணனை விருதாவிலே கண்ணை வாங்கிப் போடச் சொன்னோமே! அது தீர விசாரியாமல் செய்து போட்டோம். முந்தின பழத்திலே விஷம் தீண்டினபடியினாலேயல்லோ நம்முட குருக்கள் செத்துப் போனார். அந்தச் சேதி அறியாமல் நமக்கு உபகாரம் பண்ணி வச்ச பிராமணனை ஆக்கினை பண்ணி வைத்தோமே!" அந்த தோஷம் போக அன்னதானம், சொர்ணதானம், கன்னிகாதானம், பூதானம், பூமிதானம், கோதானம் இது முதலான தானமெல்லாம் பண்ணிவிச்சு அந்தப் பிராமணனுக்கு ரொக்க ரோசனையும் குடுத்து ஒரு...... வீட்டுத் தானம் பண்ணிவிச்சார்.

அதின் பிறகு அந்தப் பிராமணன், "நமக்கு உபகாரம் பண்ணி வைத்த கிளியை உண்மை தெரியாமல் விருதாவிலே கொன்று போட்டோமே! நான் இனிமேல் இருந்து என்ன பலன் செய்யப் போறோம்?"என்று அந்தப் பிராமணனும் தன் கழுத்தை அறுத்துக் கொண்டு காலம் கூடிப் போனார். அவருட பிராமணியும் புருஷனுடனே கூட உடன்கட்டை ஏறினாள்.

அப்படி.... படிக்கு ஏதொரு காரியமும் முன்பின் ஆலோசனை பண்ணிப் பார்க்க வேணும். தீரப் பிராமரியாமல் போனால் இப்படி வகையான காரியங்கள் அத்தன்மை வந்து முடியும். ஆகையால் நன்றாயி தீர விசாரிச்சு ஏதொரு காரியமும் செய்;ய வேணும் அய்யா!" என்று மனுநீதி உடைய மந்திரி சொன்னான்.

அதின் பிறகு போதவாதித்தன், போதசந்திரன், போதவியாதரன், போதவிபீஷணன் இந்த நாலு பேரும் வந்து கண்டு தெரிவித்து நிற்கிற வேளையிலே, போதவாதித்தன் சொல்லுவான், "முன்னும்.... கேளுமய்யா!" என்று சொல்வான்.

"வடதேசத்திலே 'இந்திரபதி' என்று ஒரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே இருந்து ஒரு பிராமணன் கட்டு சோறு கட்டிக் கொண்டு தெக்ஷிணா பூமியிலே 'திருமலை' என்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே உறமுறையார் வீடு நோக்கி வருகிறபோது, நடுவழியிலே 'காளிகாபுரம்' என்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்திலே வருகிறபோது, பிராமணனுக்கு வெகுஇளப்பாயி ஒரு குளத்திலே வந்து கட்டுச் சோற்றை அவிழ்த்து ஸ்தானபானம் பண்ணிக் கொண்டிருக்கிற சமையத்திலே, 'திருமயிலாபுரம்' என்றொரு பட்டணம். அந்தப் பட்டணத்திலேயிருந்து ஒரு பிராமணன் பெண்ஞ்சாதியோடே சண்டை போட்டுப் பிறப்பட்டுப் போறவன் அந்தக் குளக்கரையிலே மூணு நாளைய பட்டினியோடே வந்து மரத்தடியிலே களைச்சுப் படுத்திருந்தான். அவனை இந்தப் பிராமணன் கண்டு வெகு இளப்பாயிருக்கிறபடியினாலே, "வாரும் பிராமணா! கட்டமுது இருக்குது. போசனம் பண்ண

வாரும்," என்று சந்தியானம் பண்ணி வரச்சொன்னார். கட்டு சாதம் பிட்டு அவிழ்த்துப் பாதியாகக் பிட்டுப் பாதியை அப்பாலே வச்சுப் போட்டுப் பாதியைப் போசனம் பண்றான். அப்போது ஒரு கெருடன் நாக சர்ப்பத்தை எடுத்து அது வழியாக மார்க்கத்திலே பறந்து போச்சுது. அநத்ச் சர்ப்பத்தினுட விஷம் திறந்து கட்டு சாதம் அப்பாலே வச்சு இருக்கிறத்திலே விழுந்தது. அத்தைப் பிராமணன் காணான். அந்தப் பிராமணனும் தெரிசினம் பண்ணிக் கொண்டு வந்து பாதி சாதம் இருந்ததைப் போசனம் பண்ணினான். உடனே விஷம் தலைமண்டை கொண்டுது.

அப்போது சாதமிட்ட பிராமணன் கண்டு மூணு நாளாகப் பட்டினியோடும் கூடியிருந்து சாப்பிட்ட படியினாலே மூர்ச்சையாயி செத்துப் போனானென்டு வெகு விசாரப்பட்டு இருந்தான். இந்தப் பிணத்தைப் போட்டுவிட்டுப் போனால், வெகுதோஷம் வருமென்று ஒரு கைனாலேயும் ஆகாதே, அந்தப் பட்டணத்திலே அக்கிரகாரத்திலே போயி அந்தப்

பிராமணன் செத்துப் போன வழியெல்லாம் சொல்லி அவனை எடுத்து அவை அடக்கம் பண்ண வேணுமென்று பிராமணர்களை அழைத்து அந்த அக்கிரகாரப் பிராமணர்கள் சகலரும் கூடி யோசனை பண்ணி, " மகா பாவம் பண்ணிப்போட்டு, அவன் கிட்டயிருந்த திரவியம் ஆசிரித்துக் கொண்டு, அவன் தலையிலே கல்லைப் போட்டுக் கொன்று போட்டான்" என்று சகலரும் ஒரு பேச்சாக இரக்கமில்லாமல் பேசி இவனை அகண்டமான தெண்டம் பிடிச்சுக் காளிகோவிலிலே அடைத்துப் போட்டார்கள்.

அப்போ காளிகாதேவியும் வேட்டையிருந்து வருகிற வேளையிலே, கோவிலிலே அடைபட்டுக் கிடக்கிறத்தைக் கண்டு அந்தப் பிராமணனை அம்மன் அழைத்து வர்த்தமானம் கேட்டாள்.

அப்போ அந்தப் பிராமணன் அம்மனைத் தெண்டனிட்டு, இந்தப் பிராமணன் பண்ணிவித்த சேதிகளைச் சொல்லி அடிபட்டதும் முதுகு பிறமெல்லாம் வீக்கமும் காண்பித்தான்.

அம்மன் ஞான திஷ்டியிலே பார்க்கிறபோது மெய்யாக இருந்துது. அதினாலே அம்மனுக்குக் கோபாக்கினியாயி அக்கினியை விட்டு அக்கிரகாரம் முழுதும் எரியப் பண்ணிவித்தாள்.

அதின்பிறகு பிராமணர் சகலரும் கூடி, "இந்தப் பிராமணனை அடித்தோமே! காளிகாதேவி கோவிலிலே கொண்டு போயி அடைத்துப் போட்டோமென்று ஆனதுனாலே அக்கிரகாரம் முழுவதும் அக்கினிப் பிரவேசமாச்சுது" என்று காளிகாதேவி கோவிலிலே வந்தார்கள்.

அந்தப் பிராமணரைக் கண்டவுடன் அம்மன் வெகுவாயி கோவித்துக் கொண்டு, இந்தச் சேதி எல்லாம் சொன்னத்தின் பிறகு பிராமணர் சகலரும் கூடி அம்மனைத் தெண்டனிட்டு, காளி ஆட்டமும் பூசையும் குடுத்து அடைத்துக் கிடந்த பிராமணனை விட்டுச் செத்துக் கிடந்த பிராமணனையும் சாஸ்திர கிறுகை உடனே எடுத்துத் தகனம் பண்ணிப் போட்டான்.

அந்தப் பிராமணனுக்கு ஒடம்பு தேத்திக் கொள்ளப் பார்க்கிறத்துக்கு வயித்தியனும் அஞ்சு பொன்னும் குடுக்கச் சொல்லி அம்மன் அடிபட்ட பிராமணன் காயம் கருபாகட்டிவிக்கிறத்துக்குப் பிரதி வசனம் சொல்லி மூணு மாசத்துக்குள்ளாக அடிபட்ட பிராமணன் தழைத்து அவன் பட்டணமே போனார். அவரவரும் தன்னுட வீட்டிலே யிருந்தார்கள்.

அப்படிப் பசியாததின்படியினாலே பழி வந்து சுமந்துது. அப்படி அடியேன் பேரில் என்ன கலக்கமாச்சுது" என்று போதவாதித்தன் சொல்லி, முடித்திருந்த சோத்தை அவிழ்த்து நாய்க்கி போட்டான். அந்த நாயி தின்றவுடனே செத்துப் போச்சுது. வில் பொறி வந்து காவிலிலே கிடந்தவன் செத்த சேதிக்கு சாக்ஷியும் ருசு பண்றான். பள்ளியறையிலே கிடந்த சர்ப்பத்தையும் தன் விரலையும் எடுத்து வந்து காண்பிச்சான்.

இந்தப்படி சோதினை எல்லாம் காண்பித்துச் சொல்வான். "சுவாமி! பள்ளியறை முதல் கொண்டு

பாரிகளமெல்லாம் எங்கள் பாரிசம் குடுத்திருந்த படியினாலே ராத்திரி காலத்திலே பிராமரித்து வந்தப்படியினாலே ஒரு நாள் ஒரு சாமத்துக்குள்ளாகப் பட்டணம் பிரவேசம் சுத்தி வாக்கிற வயத்துப் பிறத்திலே பத்திரகாளி அழுதாள். அதே தென்று போயி கேழ்க்குமிடத்திலே அசனத்தில் நஞ்சு கலக்கிற சேதியும், சூஸ்திரப் பொறி வருகிற வழியும், பள்ளியறையில் விஷம் தீண்டுகிற வழியும் சொல்லி ராசாவைக் காப்பாத்திக் கொள்ளச் சொல்லி அம்மன் திருவிளம் பத்தினபடிக்கு, சுவாமி அவர்கள் காரியத்திலே இடையூறு வராமல் நடந்து கொண்டது சுபாகமய்யா!" என்று போதவாதித்தன் சொன்னான்.

அதின்பிறகு ராசாவின் மனதிலே வெகு சந்தோஷப்பட்டுப் பள்ளிமார்பளவுகளை நோக்கி, "ரக்ஷித்தாரை பக்ஷிக்கத்தக்கதாக ஒரு கதை உண்டு. கேளுங்கோ" என்று ராசாவானவர் சொன்னார்.

"ஒரு பிராமணன்[1] நாலு வேதமும் ஆறு சாஸ்திரமும் பதினெட்டுப் பூரணமும் அறுபத்துநாலு கலைக்கியானமும் தொண்ணூந்தாறு தத்துவமும் படித்தவன். அவன் யோகத்தினாலே ஒரு விடத்திலேயும் அன்ன ஆகாரமும் கிடையாமல் வெறகு எடுத்து வித்துப் பிழைச்சுக் கொண்டு இருப்பான். அவருக்கு ஒரு பெண்சாதியும் அஞ்சு குழந்தையுமுண்டு.[2] ஆனபடியினாலே ஒரு நாளைக்கு ஒரு கட்டு விறகு வித்துப் பத்தாமல் பிராமணியும் கூலிக்குக் குத்திக் குப்பை சிமந்தும் பிழைத்துக் கொண்டு இருப்பார்கள்.

அப்படியிருக்கிற படியினாலே, ஒரு நாள் அந்தப் பிராமணன் அருவாளும் கோடாலியும் எடுத்துக் கொண்டு மூங்கில் வனத்திலே விறகுக்குப் போறபோது, மூங்கில் வனத்திலே மூங்கிலோடே மூங்கில் இழைத்து நெருப்புப் பத்தி எரிஞ்சுது. சுத்தி

1. கமலாபுரி என்றொரு பட்டணத்திலே அம்பிகாபதி என்றொரு பிராமணனுண்டு.
2. அவருக்கு ஆறுபேர் பிள்ளைகள்.

எரியுறபோது நடுவே ஒரு முழ இடம் நெருப்புப் பிடிக்கயில்லை.அதிலே ஒரு சர்ப்பமானது கிடந்து அனல் பொறுக்க மாட்டாமலும் போறது வெளி காணாமலும் தவிக்கிற வேளையிலே, அந்தப் பிராமணன் கண்டு, "இந்தச் சர்ப்பமானது சத்து நேரத்திலே வெந்து போகும். நான் எடுத்து விடாதிருந்தால் தோஷம் வரும்" என்று சொல்லி, மூங்கில் கிளை வெட்டிச் சர்ப்பத்துக்கு முன்னாக நீட்டினான்.

மூங்கில் கிளையிலே எடுத்து வந்து அத்தை அப்பாலே போகவிட்டான். பாம்புக்கு மூலாக்கினை ஆனபடியினாலே பிராமணனை முழுங்க வேணுமென்றது.

அப்போ பிராமணன் மயங்கி, "உன்னை அக்கினியிலே வேகாமல் எடுத்து விட்டதுக்கல்லவோ என்னைப் பக்ஷிக்க வந்தாய்."

அப்போ சர்ப்பம் சொல்லும், "எனக்குப் பசி கடூரமாய் இருக்குது எந்தப் படியும் பக்ஷியாமல் விடப் போறதில்லை" என்று சொல்லிச்சுது.

"ஆனால் என்னுட பெண்சாதியும் பிள்ளையளும் விறகெடுத்து வருவாரென்டு, நாம் வித்துப் பிழைக்கலாமென்று எண்ணியிருப்பார்கள். அவர்களுக்குப் புத்திமதி என்ன?" என்று கேட்டான்.

அப்போ சர்ப்பமானது, தலையிலே இருக்கிற நாகமணிக்கல்லிலே அஞ்சாறு கல்லை ஈண்டு குடுத்து, " இத்தைக் கொண்டு போயி உன்னுட பெண்சாதிகிட்ட குடுத்துப் பிழைக்கச் சொல்லிப் போட்டுத் திரும்பி வருகிறோம் என்டு நமக்குப் பிராமணிக்கம் பண்ணிக் குடுத்துப் போம்" என்று கேட்டுது.

அந்தப்படிக்குப் பிராமணிக்கம் பண்ணிக் குடுத்துக் கல்லையும் வாங்கிக் கொண்டு பிராமணிகிட்ட குடுத்து இந்தச் சேதியும் சொல்லிப்

பின்னையும் சர்ப்பத்துக்கிட்ட வந்து சர்ப்பத்தைப் பாத்து, “உம்மிட பசி ஆக்கிக் கொள்ளும்!” என்று பிராமணன் சொன்னான்.

அப்போ பிராமணனை அறியாமல் பிராமணன் பிள்ளையும் சனத்துக்கொரு தடி எடுத்துக் கொண்டு பின்னாலே வந்தார்கள். அவர்களைச் சர்ப்பமானது கண்டு பிராமணனுடனே, “நீ நம்மை நெருப்பிலே வெந்து போகாமல் எடுத்து இப்பால் ரக்ஷித்தாயே! அப்படியிருக்க உன்னைப் பக்ஷிக்க வேணுமெனு நினைத்தோமே! அந்தப்படியே உன்னைப் பக்ஷிச்ச உடனே பசி தீரப் போகுதா? இப்போது உன் பெண்சாதியும் உன் பிள்ளைகளும் தடி கொம்பு எடுத்து வருகிறார்கள் என்று நீ எப்போதும் போலே போயி மகராசனாகப் பிழைச்சுக் கொண்டிரு” என்று சொல்லிப் பிராமணனைச் சர்ப்பமானது அனுப்பிவிச்சுது.

“அப்படிபோலே அவன் நம்மை ரக்ஷிக்கனும் அவனைக் பக்ஷிக்கவென்றல்லோ நினைந்தோமே! இந்தப் பாவம் போறதுக்கு எப்படி?” என்று ராசா சொன்னார்.

அப்போ போதவாதித்தன் எழுந்து ராசாவைத் தெண்டன் பண்ணி, "சுவாமி! அந்தச் சர்ப்பத்தைப் போலே மனுஷா நினைக்கயில்லையோ? மனதறியாமல் நினைத்ததுக்குப் பாவமில்லை" என்று போதவாதித்தன் சொன்னான்.

அந்தப்படிக்கு ராசாவானவர் இசைந்து போதவாதித்தன் பேரிலே வெகு சந்தோஷமாயி போதவாதித்தனுக்குப் பல்லக்குக் குடுத்து, ஆடை ஆபரணம் குடுத்துத் தானம் பண்ணிவிச்சு எப்போதும் போலே ராசாவும் மந்திரியும் இந்த அஞ்சு மந்திரிமாரும் ராசாவை இடம் விடாமல் காத்துக் கொண்டு, இனிமேலும் வருகிற ஆபத்தைக் காத்து ஒப்பிவிச்சுக் கொண்டு இருந்து காலம் வருங்காரியம், போங்காரியம், வருங்காலம், போங்காலம் சொல்லிக் கொண்டு ராச்சியத்தை ஆறிலொன்று கடமை கொண்டு அசையா மணிகட்டிக் கொண்டு மனுநீதி உடனே அநியாயமில்லாமல் செங்கோல் செலித்தி ராச்சியபாரம் ஆண்டு வருவார்கள். தர்மம் தானத்திலே அன்ன கொடி

கட்டிக் கொண்டு அரிதேசிக்கும் பரதேசிக்கும் எல்லோருக்கும் அன்னதானம், சொர்ணதானம், பூமிதானம், கோதானம் குடுத்து வரச்சொல்லிக் கட்டளையிட்டுத் தேவேந்திரனுடனே இந்திரப் பதவி பட்டணம் போலே ராச்சியபாரம் பண்ணிக் கொண்டு என்றும் பதினாறு வயசாக இருந்தார்கள், என்றவாறு.

★★★★★

# பின்னிணைப்பு – 1

## தாள் சுவடியில் 'மனுநீதி' எனும் மந்திரி சொன்ன கதை

ராசா சொன்ன உத்திரம் கேட்டு மனுநீதி சொல்லுகிறான், "சுவாமி, தர்மதுரையே! தங்களுக்குத் தெரியாத ஞாயம் என்ன இருக்குது? இப்படிப்பட்ட காரியம் செய்தவனுக்கு என்ன ஆக்கினை செய்தாலென்ன? ராசா செய்கிற தண்டனைக்குப் பதில் சொல்லுகிறவன் யாரிருக்கிறவன்? ஆனாலும் தேவரீர் என்பேரில் தயவுசெய்து சொல்லுகிறபடியினாலே எனக்குத் தெரிஞ்ச மட்டுக்கும் நான் சொல்லுகிறேன். பூர்வத்திலே நடந்த சமாசாரம் என்னவென்றால், கனகாபுரி என்றொரு பட்டணமுண்டு. அந்தப் பட்டணத்திலே சௌமியன் என்றொரு பிராமணன் உண்டு. அவனுக்குப் பிள்ளையில்லாமல் வெகுநாளாய்ச் சீவனம் பண்ணும்போது அவனுடைய பெண்சாதியானவள் நமக்குப் பிள்ளையில்லாமல்

போச்சுதே. ஆனால் ஒரு பஞ்சவர்ணக்கிளியாகிலும் வளத்தோமானால் கொஞ்சம் விதனம் தீராதாவென்று சொன்ன வார்த்தை பிராமணன் கேட்டு அப்படியே ஆகட்டுமென்று சொல்லித் தான் சம்பாதிச்ச பணம் எடுத்துக் கொண்டு சீமையெல்லாம் சுத்திப் பார்த்துக் கொண்டு வரும்போது ஒரு வேடன் பஞ்சவர்ணக் கிளியை வியாபாரம் பண்ண வந்தான்.

அப்போ இந்தப் பிராமணன் வேடனுக்குத் திரவியம் குடுத்து, அவன்கிட்ட இருந்த கிளியை வாங்கிக் கொண்டு தன்னுடைய வீட்டுக்கு வந்து சேர்ந்தான். அப்படிப்பட்ட கிளிக்கு ஆகாரம் பண்ணிவிச்சு வளத்துக்கொண்டு வருகிற நாளையிலே அந்தக் கிளியானது அன்பத்தாரு தேசத்துப் பாஷையும் கத்துது. அந்தக் கிளியை ராவும் பகலுமாகப் பெத்த பிள்ளையைப் போலே காப்பாத்திக் கொண்டு வந்தார்கள்.

அப்படிப்பட்ட கிளியானது, இவாளை ரெண்டு பேரையும் விட்டுப் பிரியாமல் மிகவும் அறிவோடே

கூடியிருக்கிற நாளையிலே, ஒருநாள் இந்தக் கிளியானது, வீட்டு மேலேறி விளையாடும்போது சிறிது கிளிகள் வந்து இத்தோடே பேசிக் கொண்டிருக்கும் வேளையில் இந்தப் பஞ்சவர்ணக் கிளியைப் பார்த்துச் சொல்லி, "சீ, வாராய், பஞ்சவர்ணக் கிளியே! நீயொரு அதிசயம் அறிவயோ?" என்று அதிலே ஒரு கிளியானது சொல்லுகிறது, "அது என்னவென்றால், சிங்களத் தீவிலே ஒரு மாமரமிருக்குது. அந்த மாமரத்திலே நாளொன்றுக்கு ஒரு பழம் பழுக்குது. அந்தப் பழத்தைச் சாப்பிட்டவாள் கிழமாயிருந்தாலும் பதினாறு வயசும் நல்ல யௌவ்வனமாய் இருக்கிறான். தனக்கு வேணுமென்றால் எங்கள் பின்னாலே வந்தால் காண்பிக்கிறோம். அந்தப் பழமானது ஒருநாள் கிடைக்குமேயல்லாமல், இன்னைக்கிக் கொண்டு வந்து, நாளைக்கும் போனால், அந்தப் பழமானது கண்ணிலே காண்பிவிக்கிறதில்லை. அந்த மரம் ஏழு கடலுக்கு அப்புறம் தீவிலேயிருக்கிறது" என்று சொன்ன வார்த்தை கேட்டுப் பஞ்சவர்ணக் கிளியானது

சொல்லும், "ஆனால், நானும் வருகிறேன். அந்தத் தீவிலே அனைவரும் போய் இருக்கிற மாம்பழம் பறித்துக் கொண்டு வருவோம்" என்று அந்தக் கிளிகளோடே கூடப் பிறப்பட்டுப் போய்ப் பழம் கொண்டு வந்து தன்னுடைய பிராமணனுக்குக் காண்பிவிச்சுது.

அந்தப் பிராமணன் வந்த பஞ்சவர்ணக் கிளியைப் பார்த்துக் கேட்டான், "இந்தப் பழத்திலே அதிசயமென்ன? நீ எங்கேயிருந்து கொண்டு வந்தாய்?" என்கிறதாகக் கேட்ட உடனே அந்தக் கிளியானது, "சுவாமி! பிராமணோத்தமரே! இந்தப் பழம் சாப்பிட்டால் என்றும் பதினாறு வயசாக, சுகமாகயிருப்பார்கள். அப்படிப்பட்ட பழத்தைத் தேவரீர் சாப்பிட வேணுமென்று சிங்களத் தீவிலேயிருந்து கொண்டு வந்தேன். இநதப் பழம் தாங்கள் சாப்பிட வேணும்" என்று அந்தப் பிராமணனுக்குக் குடுத்தது.

அப்போ அந்தப் பிராமணன் கையிலே வாங்கிக் கொண்டு மிகவும் அதிசயப்பட்டு, 'ஓகோ!

அதிசயமானது. இந்தப் பழத்தை நாம் சாப்பிட்டு ஆக வேண்டியதென்ன இருக்குது? இந்தப் பட்டணத்து ராசாவுக்குக் கொண்டு போய்க் கொடுத்தால் அவர் சாப்பிடுவார். அவர் நல்லாயிருந்தால் போதும். நமக்கு இந்தப் பட்டணத்திலே பிச்சை ஆப்பிடும். ராசா சுகமாயிருந்தால் செனங்களும் சுகப்படுவார்கள்' என்று யோசினை பண்ணி அந்தப் பழத்தை ராசாவுக்கு ஆசீர்வாதம் பண்ணிக் குடுத்தான்.

அப்படிக் குடுத்த பிராமணனை மிகவும் உபசாரங்களைச் செய்து, “இந்தப் பழத்திலே என்ன அதிசயம் இருக்கிறது?” ராசா கேட்டார்.

அந்த சௌமியன் என்கிற பிராமணன் தன்னண்டையிலே இருக்கிற கிளி சொன்னதெல்லாம் விவரமாக அறிக்கை பண்ணினான். அப்போது ராசாவானவன் மிகுதியும் சந்தோஷப்பட்டுப் பழத்தைக் கையிலே எடுத்தார். அந்தச் சமயத்திலே ஒரு யோசினை பிறந்தது. ‘இந்தப் பழத்தை நாம் மாத்திரம் சாப்பிட்டுக்

கிருபையென்ன? இந்த மாம்பழம் சனங்கள் எல்லோரும் சாப்பிட வேணும். நம்முடைய சீமையெங்கும் நன்றாயிருக்கும்படி செய்ய வேணும். ஆகையால், இது பயிர் பண்ணி மாமரம் வளர்ந்து காய்த்துப் பழம் பழுத்தால், நம்முடைய ராச்சியத்திலே இருக்கிற சனங்கள் எல்லோரும் சாப்பிடுவார்கள். அந்தப் படிக்கு நடப்பிக்க வேணும்' என்று மனதுலே நிச்சயமாக எண்ணி ஊழியக்காரரை அழைப்பிவிச்சு, அவாளுக்குக் கட்டளையிட்டு, இந்த மாம்பழம் குடுத்துப் பயிர் பண்ணச் சொன்னார்.

அப்படியே அவாளும் நல்ல நிலமாய்ப் பார்த்து அதிலே அவர் சொன்னபடிக்கு மாம்பழத்தைக் கொண்டு வந்து பயிரும் பண்ணிக் காப்பாத்தினாள். அந்த மாங்கொட்டையிலேயிருந்து முளையெடுத்துப் பயிராய் அஞ்சு வருஷத்துக்குக் காயும் காச்சுப் பழம் பழுத்தது.

அந்தப் பழத்தை ராசாவானவர் கொண்டு வரச் சொல்லித் தன்னுடைய குருக்கள் கையிலே ஒரு பழம்

குடுத்துச் சாப்பிடச் சொன்னார். அப்போ ராசா குடுத்த பழத்தைக் குருக்கள் வாங்கிச் சாப்பிட்டு மூணு நாழிகைக்குச் சிவலோகம் அடைந்தார்

ராசா சோதினை பார்க்க வேணுமென்று முதல் பழுத்த பழம் பெரியோர், குருக்களுக்கு குடுத்து அப்பால் எல்லோருக்கும் குடுப்போமென்று யோசினை பண்ணினதற்கு அந்தப் பழத்தைப் பாம்பு கடிச்சு விஷம்பட்டு இருந்தபடியினாலே, அந்தப் பழத்தைச் சாப்பிட்ட குருக்கள் இறந்து போனார். அது விஷயம் அறிய மாட்டாமல் ராசா விதனப்பட்டுச் சிவனை நொந்து கொண்டு, 'நாம் என்ன பாவம் செய்தோமோ, இந்தக் கருமம் வந்து லெபிச்சுது' என்று மிகவும் கிலேதப்பட்டுப் பிராமணனைக் கூட்டி வரச் சொல்லிச் சொன்னார்.

அப்போது பிராமணன் வந்த உடனே, ராசா சொல்லுகிறார், "வாருமய்யா, பிராமண உத்தமரே! உம்மாலே குருக்கள் சிவலோகம் போய்ச் சேர்ந்தார். நல்ல கருமம் வந்து லெபிச்சுது. இப்படிப்பட்ட காரியம்

என்னத்துனாலே செய்தீர்? உமக்கு நான் என்ன அபகாரம் பண்ணினேன்? என்னாலே உமக்கு என்ன உபத்திரமுண்டாச்சுது? நல்ல வேளையாய் நான் சாப்பிடவில்லை. என்னைக் கொல்ல வந்த எமன் என்னுடைய குருக்களைக் கொண்டு போய்விட்டது" என்று மிகவும் கோபத்துனாலே வார்த்தைகள் சொல்லிப் போட்டுப் பிராமணனானபடியினாலே ஆக்கினைக்கிக் கட்டளையிடமாட்டாமல், மந்திரிகளை அழைத்து இந்தப் பிராமணன் பண்ணின அபகாரத்துக்கு நம்முடைய சீமை விட்டுத் துரத்திவிடச் சொன்னார். அப்படியே அந்த மந்திரிமாரும் செய்தார்கள்.

அப்போ அந்தப் பிராமணன் தன்னுடைய வீட்டுக்கு வந்து பிராமணத்தியை அழைத்து, "வாரும் பெண்ணே! நமக்கு மகத்தான ஆபத்து வந்து இருக்குது. என்னவென்றால், பஞ்சவர்ணக் கிளியானது மாம்பழம் கொண்டு வந்து குடுத்துதே. அந்தப் பழம் சாப்பிட்டபேர் என்றும் பதினாறு வயசாக இருப்பார்கள் என்று நான் ராசாவுக்கு ஆசீர்வாதம் பண்ணிக்

குடுத்தேன். அப்படிப்பட்ட பழத்தை ராசாவானவர் வாங்கிக் கொண்டு, 'இந்தப் பழம் நாம் மாத்திரம் சாப்பிட்டு ஆக வேண்டியதென்ன? நம்முடைய சீமையிலே இருக்கிற பதினெட்டு சாதியும் எல்லோரும் சாப்பிட வேணும். சனங்கள் அனைவரும் சுகமாய் என்றும் பதினாறு வயசுமாயிருந்தால், நமக்குப் பேரும் பிரதிட்டையுமுண்டு' என்கிறதாய் மனதிலே எண்ணிக் கொண்டு, அந்தப் பழத்தைப் பயிரு பண்ணிவிச்சு அந்த மரம் காச்ச உடனே பழங்கள் பழுத்தால் எல்லோருக்கும் குடுக்கலாம் என்று மந்திரிமாருக்குத் திட்டம் பண்ணினார். அப்போ, மந்திரிமாரும் அப்படியே பயிரு பண்ணிவிச்சு, காச்சுப் பழுத்த உடனே, நல்ல பழமாய் ஒரு பழம் பறித்துக் கொண்டு வந்து ராசாவின் சமூகத்திலே வச்சார்கள். அந்தப் பழத்தை எடுத்து ராசாவானவர், இந்தப் பழம் முதல் பழுத்த பழமானபடியினாலே இத்தை நம்முடைய குருக்களுக்குக் குடுத்துச் சோதினை பார்க்க வேணுமென்று குருக்களை அழைப்பிவிச்சு அவருடனே இந்த விருத்தாந்தம் சொல்லி, இந்த

மாம்பழத்தைச் சாப்பிட வேணுமென்று ராசா சொல்லிக் குருக்களுக்குக் குடுத்தார். அந்தப் பழத்தைக் குருக்களும் வாங்கிச் சாப்பிட்டார். சாப்பிட்ட மூணு நாழிகைக்குப் பின்பு குருக்களும் சிவலோகம் போய்ச் சேர்ந்தாராம். ஆனபடியினாலே ராசாவானவர் நன்மை எண்ணினதற்குத் தின்மையாக நடந்தபடியினாலேயும் இப்போ நமக்கு இருவருக்கும் ஆக்கினையிட்டார். இப்படிப்பட்ட குலபாதகத்தைப் பண்ணினபடியினாலே நம்முடைய சீமை விட்டுப் புறப்பட்டுப் போவென்று ராசா மிகவும் கோபம் பண்ணினார். ஆகையாலே, நம்முடைய பிள்ளையான பஞ்சவர்ணக் கிளியினாலே, நமக்கு அமது வந்துது" என்று தம்முடைய பெண் சாதியைப் பார்த்து மகாவிதனத்தோடே சொன்னார்.

இப்படிச் சொன்ன புருஷன் வார்த்தை கேட்டு அவளும் மகா கோபத்துடனே புருஷனைப் பார்த்துச் சொல்லுகிறாள். "வாருமய்யா, சுவாமி! பிராணநாயகரான பிராமணோத்தமரே! உமக்கு மதி மயங்கி ராசாவுக்குக் கொண்டுபோய் மாம்பழத்தைக்

குடுத்தீர். எங்கேயாகிலும் இப்படியுண்டோ? ஒரு மாம்பழத்துனாலே இப்படிக்கு அவகடு வருமோ? நம்முடைய விதிவசமோ? மகானுபாவரே! நாம் பிள்ளையில்லையென்று கிலேதப்பட்டதற்கு, இந்தப் பஞ்சவர்ணக்கிளியானது நமக்கு மிகவும் பிள்ளையைக் காட்டிலும் அதிகமாய்ச் சந்தோஷம் பண்ணினது போலேயிருந்து கொண்டு, இப்படிப்பட்ட அமடு பண்ணிவிச்சுதே! இந்தக் கிளிக்கு நாம் என்ன பாவம் பண்ணினோம். சிவ சிவா!" என்று ஈசுவரனை நொந்து கொண்டாள். பின்னையும் விதனத்துனாலே கண்களைச் சிவக்கப்பண்ணிக் கொண்டு புருஷனைப் பார்த்துச் சொல்லுகிறாள். "வாருமய்யா, சுவாமி! இந்தக் கிளியானது நமக்கு ஆகாது. இப்படிப்பட்ட அபகீர்த்தியை வரத்தக்கதாகப் பண்ணிவிச்சுதே! இன்னம் என்ன காரியம் பண்ணயிருக்குதோ! அந்த மாம்பழத்தைத் தேவரீர் சாப்பிட்டால், அந்தக் குருக்கள் போனவழியல்லோ தமக்கும் வரும். தேவரீர் சாப்பிடாது போனதே சரி. ஆனால் மறுதேசத்துக்குப் போகவேண்டி வந்திருக்குது. ஆனாலென்ன? உசுரோடேயிருந்தால்

பிளச்சுப் போகலாம். இன்னைய தினமே இந்தக் கிளியைச் சம்மாரம் பண்ணிப் புதச்சுப் போட்டு, நாளை சூரிய உதயத்துக்குப் பயணம் புறப்படுவோம்" என்று பேசிக்கொண்டிருக்கும் போது அந்தக் கிளியானது விளையாடப் போயிருந்தது.

இவாள் ரெண்டு பேருமாக விதனப்பட்டுக் கொண்டிருக்கிற சமயத்துலே ஓடிவந்து, தாயாருக்குச் சமானமான பிராமணத்தியின் மடியிலே வந்து உட்காந்துது. அப்போ, கிளியானது பிராமணத்தி முகத்தைப் பார்த்து யோசினை பண்ணித் தன் மனதுலே தானே எண்ணிப் பார்த்து, 'ஓகோ! இதுவென்ன காலமோ தெரிய வராது. நம்மைக் கண்டால் இரண்டு கைகளாலேயும் அணைத்துக்கொண்டு முத்தமிட்டுக் கொள்ள வேணுமே! நம்முடைய பேரிலே கோபமாயிருக்கிறாளோ, இல்லையென்று நம்முடைய கோபத்துனாலே ஏதாகிலும் திட்டினாரோ! நாம் வந்த உடனே பேசாமலிருக்க வேண்டியதென்ன!' என்று மனதிலே சிந்திச்சுக் கொண்டு தாயார் முகத்தைப் பார்க்கும். தோப்பனார் முகத்தைப் பார்க்கும்.

இந்த விதமாகக் கிளியானது பார்த்துக் கொண்டிருக்கையிலே, பிராமணத்தியினுடைய கண்களிலேயிருந்து ஒரு சொட்டுக் கண்ணீர் விழுந்தது. அந்த வேளையிலே, இந்தக் கிளியானது மிகுதியும் வேதனத்துனாலே சொல்லும், "வாராய், தாயே! நீங்கள் ரெண்டுபேரும் என்னைப் பார்த்து விதனப்படுகிறதென்ன? என்னாலே என்ன காரியம் பண்ணப்பட்டுது? இதுவரைக்கும் தங்களுக்கு மனது கோணாமல் நடந்து வந்ததேயல்லாமல், நானப்படிக்கு வித்தியாசமாக நடக்கவில்லை. அப்படியிருக்கையிலே, இன்னைக்கி என்னைக் கண்ட உடனே அய்யாவும் நீயும் ஒருத்தர் முகத்தை ஒருத்தர் பார்த்துக் கொண்டு விதனப்பட வேண்டியதென்ன இருக்குது? இல்லையென்று ராசா நீதி தப்பி ராசாவானவன் அவமானம் பண்ணினானோ? உங்களுக்கு வந்த அமடுகளெல்லாம் தீத்துப் போடுகிறேன். என்னுடனே சொல்ல வேணும்" என்று கிளியானது, கொஞ்சிக் கொஞ்சிப் பேசுற வார்த்தை பிராமணத்தியானவள்

கேட்டுத் தன்னுடைய மடியிலேயிருக்கிற கிளியைப் பார்த்து, அழுது கொண்டு கண்ணீர் பூமியிலே விழுந்து, குளமாய்ப் பெருகி மிகவும் தயவுடனே கூடிக் கோவத்தை நிறுத்திச் சிவனை நொந்து கொண்டு, பிள்ளைக்குச் சமானமான கிளியைப் பார்த்துச் சொல்லுகிறாள். "வாராய், மகனே! சிவனுடைய செயல் யாராலே அறியப்படும். எங்களுடைய கருமத்தினாலே வந்த அமடேயல்லாமல் வேறொன்றுமில்லை. உங்களாலே ஆகவேண்டியதென்ன? எங்கள் விதிவசம் இப்படியிருந்தது" என்று விதனப்பட்டுக் கொண்ட பிராமணத்தியைப் பார்த்து மிகவும் அறிவும் வினையுமுள்ள கிளியானது சொல்லும், "வாராய், தாயே! அம்மா! நானந்த விதனத்தைத் தீர்த்து வைக்கிறேன். தங்களுக்கு என் போலக் கொத்த பிள்ளையிருக்கையிலே, விதனப்படுவானேன்? உங்களுக்காக என் தலையாகிலும் குடுத்துத் தங்களுக்கு வந்த அமடு தீரப் பண்ணிவிக்கிறேன். தேவி? இந்த வார்த்தையை நிச்சயமாகயெண்ணிக்

கொண்டு என் பேரில் தயவுசெய்து சொல்லவேணும்" என்று மிகவும் சந்தோஷம் பண்ணிவிச்சுது.

அந்தச் சமயத்திலே பிராமணத்திக்குக் கொஞ்சம் சந்தோஷம் உண்டாச்சிது. இந்தக் கிளியின் பேரிலே விதனமும் இருக்கத் தப்பாமல் சொன்னாள். அப்போது பஞ்சவர்ணக் கிளியானது, "தாயே! அப்படிக்கு நான் கொடுத்து மாம்பழத்தினாலே அசடு வரமாட்டாது. அந்தப் பழத்தைச் சாப்பிட்ட பேருமிருக்கிறாள். தொண்ணூறு வயசுக் கிழமாக இருந்த பேரெல்லாம் சாப்பிட்டு, நல்ல பதினாறு வயசு யெவ்வனமாக, நல்ல சவுந்தரியத்தோடே கூடியிருக்கிறார்கள். அப்படிப்பட்ட மாம்பழத்தை நான் சாப்பிட மாட்டாமல் நம்முடைய அய்யாவும் தேவியும் சாப்பிட்டு நன்றாயிருக்க வேணுமென்று என்னுடைய மனது பூர்வமாக எண்ணித் தங்களுக்குக் கொண்டு வந்து கொடுத்தேன். அந்தப் பழத்தை அய்யாவும் யோசினை பண்ணிப் பார்க்காமல் ராசாவுக்குக் கொண்டு போய்க் குடுத்தார். அந்தப் பழத்தை வெகுசனங்களுக்கு உபசாரம் பண்ணுகிற

நிமித்தியமாகப் பயிரும் பண்ணிவிச்சு, மரமாக வளர்கிறதற்குக் காவல் கட்டும் பண்ணிவிச்சுப் பழத்தைக் கொண்டு வரச் சொல்லி முதலிலே குருக்களுக்குக் குடுத்துச் சாப்பிடச் சொன்னார். இப்படி நடப்பிவிச்சு ராசாவும் நீதியுள்ளவனே. சரி, நம்முடைய வேளையிப்படிக்குப் பொல்லாப்புக் கொண்டு வந்து விட்டுது. தெய்வம் பண்ணின குறைக்கு நாம் விதனப்பட்டுச் செய்யலாவதென்ன? நீங்கள் ஒண்ணுக்கும் விதனப்பட வேண்டாம். இந்த அமடு நான் தப்பிவிச்சுவிக்கிறேன். இந்த ராசாவானவர் தீர விசாரியாமல் உங்களை ஊரைவிட்டுப் போகச் சொன்னாரே. அவருடைய வாயினாலே, 'சிவ சிவா! பிராமணன் தெய்வமென்று பெரியோர்கள் சொல்ல நாம் கேட்டு இருந்தும் ஒரு மாம்பழத்தைத் தொட்டு மனதிலே கோபம் பண்ணிக்கொண்டு பிராமணனை ஊரைவிட்டுத் துரத்திவிட்டோமே! அந்தப் பிராமணனும் தன்னுடைய வீடு வாசல்விட்டு, விதனப்பட்டுக் கொண்டு எந்தச் சீமையிலே

இருக்கிறானோ! நமக்கு நன்மை செய்ய வந்ததற்கு நாம் அவருக்குத் தீமை செய்தோமே! நமக்குப் புத்தியில்லாமல் போச்சுதே!' என்கிறதாக ராசா விதனப்படப் போறார். அது எப்படியென்றால், ஒரு பழத்தைச் சோதினை பார்த்ததேயல்லாமல் ரெண்டாம் பழத்தைப் பறித்துச் சோதினை பார்க்கவில்லையே! அதுவறிந்து நான் சொல்லுகிறேன் தாயே! இன்று முதல் நான் அந்த மரத்தடியிலேதானே காத்திருந்து, அந்தப் பழத்தைப் பறித்து நானும் சாப்பிட்டு வந்தவாளுக்கு எதுரவே அந்தப் பழத்தைக் கடிச்சு, அவாளுக்கு முன்னாலே போட்டுவிக்கிறேன். இப்படியிருக்கிற வேளையிலே யாராகிலும் அந்தப் பழத்தைச் சாப்பிடுவாள். சாப்பிட்ட உடனே அவாளுக்குத் திவ்விய தேகமாய்விடும். அப்போவாகிலும் ராசாவானவர் அறிய மாட்டாரா? ஆகையாலே, நீங்கள் ஒன்றுக்கும் யோசினை பண்ணாமல் இந்தச் சீமை விட்டு மத்தொரு சீமையிலே போயிருங்கள்" என்று சொன்னது.

பிராமணனும் பிராமணத்தியும் கேட்டு மிகவும் சந்தோசப்பட்டு நல்ல யோசனையுள்ள கிளியென்று அதிசயத்துடனே பிராமணன் கிளியைப் பார்த்துச் சொல்லுகிறான், "வாராய், கிளியே! நீ சொன்னதெல்லாம் சரியே. ராசாவும் நமக்கு அவமானம் பண்ணிவிச்சார். அப்படிப்பட்ட ராசாவுக்கு விவேகம் வரும்படி பண்ணிவிக்கிறேன் என்கிறதாகச் சொன்னியே, அந்த மரத்தின் கீழே நீ காத்திருந்தால் எங்களுக்குப் பிள்ளையாரிருக்கிறாள்? உன்னைப் பார்த்து நாங்கள் பிள்ளையைக் காட்டிலும் அதிகமாயெண்ணிக் கொண்டு சந்தோஷப்பட்டுக் கொண்டு இருக்கிற எங்களுக்கு எந்தவிதமாகப் போது போகப் போறது" என்று மிகுதியும் கிளியைப் பார்த்துச் சொன்னார்.

அப்போது பிராமணத்தியானவள் தன்னுடன் சொன்ன வார்த்தை கேட்டு மிகவும் சந்தோஷப்பட்டு, வினையத்துடனே கொஞ்சம் விதனமாகச் சொல்லுவாள். "சுவாமி, பிராணநாதரே! தேவரீர்

சொன்ன யோசினையும் ஒப்புக் கொண்டேன். இப்படி அறிவுள்ள கிளியானது நம்மை விட்டுப் பிரிந்தால் நமக்கு நித்திரையாகாரம் வருமோ? எந்தவிதமாய்ப் பிரிந்திருக்கப் போறோம்? அது காரியம் எனக்குத் தோணவில்லை. ஒருநாள் இந்தக் கிளியானது என்னுடைய சமீபத்திலே இல்லாமல் போனால் நான் பிராணத்தை விட்டுவிடுவேன்" என்றாள்.

இந்தவிதமாகச் சொன்ன இவாள் வார்த்தை பஞ்சவர்ணக் கிளியானது கேட்டுச் சொல்லும். "பாருமய்யா, பிராண நாயகரே! நீங்கள் ஏன் விதனப்படுகிறீர்கள்? நீங்கள் இங்கேயிருந்து புறப்பட்டு ஒரு தேசத்திலே போயிருங்கள். நானும் உங்கள் பின்னோடே வந்து நீங்கள் இருக்கிற இடத்தை நான் அறிந்து கொண்டு தினப்பிரதி மாமரத்தின் பூர்வோத்திரம் தங்களுக்கு அறிக்கை பண்ணிவிச்சுக் கொண்டு தங்களை விட்டுப் பிரியாமல், அத்தமானம் வரைக்கும் மாமரத்தைக் காத்திருந்து, ராத்திரியானால், தங்களண்டை வந்து சேருகிறேன்.

நீங்கள் ஒன்றுக்கும் விதனப்பட வேண்டாம்” என்று அவாளுக்குத் தைரியம் சொல்லி, அப்பால் பின்னையும் யோசினை பண்ணிப் பார்த்து ‘ஒரு வேளையிலே, ராசாவுக்குப் கோபம் வந்து இந்த மாமரத்தை வெட்டிப் போடச் சொல்லிக் கட்டளையிட்டாராகில், நாம் சொன்னதெல்லாம் பொய்யாகப் போமே! ஆனதால், ராசாவின் அரமனைக்கிப் போயிருந்து அந்த மாமரத்தை என்ன செய்கிறார்களோ போய்க் கண்டு வர வேணும்’ என்று மனதிலே யோசினை பண்ணிப் பிராமணனை அழைத்து, “சுவாமி! ராசாவானவர் பண்ணின காரியத்துக்கு அமடு வந்தபடியினாலே, அந்த மாமரமிருந்தால் இன்னமென்ன அமடு வருமோவென்று, ஊழியக்காரரை விட்டு அந்த மரத்தை வேரோடே வெட்டிப் போடச் சொல்லுவார். ஆனதால், நான் புறப்பட்டு ராசாவினுடைய அரமனையிலே நடக்கிற காருபாரு கேட்டு வருகிறேன். அதுவரைக்கும் இவடம் விட்டு எங்கும் போக வேண்டாம்” என்று யோசினை சொல்லி அவாளை

நிறுத்திவிச்சுப் போட்டு, அந்தக் கிளியானது புறப்பட்டு ராசா இருக்கிற கொலுவுக்கூடம் வந்து சேர்ந்து ஒரு ஒப்பரிகையின் மேலேயிருந்து கொண்டு, ராசா என்ன காருபார் செய்யுகிறாரோ, மந்திரிமார் என்ன ஆலோசினை சொல்லுகிறார்களோ என்று பார்த்துக் கொண்டிருந்தது.

அவடத்திலே ராசா மந்திரிகளைப் பார்த்துச் சொல்லுகிறார், "ஒரு பிராமணன் செய்த அநியாயம் பார்த்தீர்களா?! மந்திரிமார்களே இந்தக் கருமத்துக்கு நான் என்ன செய்யப் போறேன்? இனிமேலாகிலும் அந்த மாமரத்தைச் சுத்தும் சுவரு வைத்துக் காவல் கட்டுப் பண்ணி, சாக்கிரதையாக ஒருத்தரும் தொடாதபடிக்கிருக்க வேணும்" என்று ராசா கட்டளையிட்டார். அப்படியே மந்திரிகளும் சம்மதிச்சார்கள்.

அந்தக் கிளியானது, ராசா சொன்ன வார்த்தையும் மந்திரிமார் அப்படியே ஆகட்டுமென்று சொன்னதையும் கேட்டுக் கொண்டு இருந்து மிகவும்

சந்தோஷப்பட்டுது. தைவாதீனமாக அந்த மாமரத்தை வெட்டிப் போடச் சொல்லாமல் காப்பாத்தி வரச் சொல்லி ராசா கட்டளையிட்டாரே. நம்முடைய பிராமணனுக்கு யாதொரு பயமுமில்லை. அவருக்கு வந்த அவமானமும் தப்பிவிக்கலாம் என்று அவடம் விட்டுச் சீக்கிரமாகப் புறப்பட்டுப் பிராமணன் சமீபத்திலே வந்து, "அகோ வாருமய்யா, சுவாமி! நீங்கள் ஏன் விதனப்படுகிறீர்கள். ஒன்றுக்கும் யோசினை பண்ண வேண்டாம். இனிமேல் நீங்களும் ஒருவிடம் போய்ச் சேர்ந்து சுகமாய் இருங்களய்யாவே! சிறிது நாளைக்குள்ளே நீங்கள் எப்போதும் போலே வந்து, சுகமாக என்னையும் காப்பாத்திக் கொண்டு சுகமாய் இருக்கப் போறீர்கள். அதுக்கான வயணமும் பண்ணிவிக்கிறேன். ஆனபடியினாலே, தேவரீர் ராசாவினுடைய ஆக்கினை தப்பாமல் நடக்க வேணும்" என்று அவர்களுக்குத் தைரியம் சொன்ன கிளியைப் பார்த்து மிகுதியும் சநதோஷப்பட்டுக் கிளியை அழைத்துக் கொண்டு பிறப்பட்டு அந்த

ராசாவினுடைய சீமை விட்டு மறுசீமையிலே சுகமாக வாசம் பண்ணுகிறபோது, பஞ்சவர்ணக் கிளியும் அவர்களுக்கு மனது கோணாமல் நடக்க வேணுமென்று இந்த மாமரத்தின் மேலே வந்து காத்துக் கொண்டிருக்கிற நாளையிலே அந்த ராசாவும் மாமரத்தைச் சுத்திக் கோட்டையெடுத்துக் காவல் வைச்சு, அதுக்கான மட்டும் பண்ணியிருக்கிறபோது, அந்தப் பட்டணத்திலே ஒரு வண்ணாத்தியானவள், மருமகளோடே சண்டையாக மிகவும் கோபம் பண்ணிக் கொண்டு, 'இனிமேல் இந்த மருமகளுடைய முகத்தைப் பார்க்கிறதா?' என்று விதனத்துலே முழுகி, 'ராசாவினுடைய அரமனையிலே நஞ்சு மாமரமிருக்கிறதே. அதின் பழத்தைச் சாப்பிட்டுச் சீவனை விட்டுவிட வேணும்' என்று மனதிலே உறுதிபண்ணிக் கொண்டு அந்தக் கிழவியானவள், ராசாவினுடைய அரமனையிலே வாடிக்கையாய் வருகிறபடியினாலே, ஒருநாள் இந்த மாமரத்தை வந்து பார்த்தாள். பார்த்தும் இவளுக்கு மாமரம் கண்ணுக்குத்

தெரியவில்லை. சுத்திலும் சுவரானபடியினாலே, இந்த வண்ணாத்தி, சந்திரசேகரனான பரமசிவனைத் தோத்திரம் பண்ணிக் கொண்டு, 'சிவ சிவா! நானென்ன செய்யப் போகிறேன்? மருமகளுடைய உபத்திரவத்தினாலே சயிக்கமாட்டாமல், சீவனைவிட்டுவிடுவோமென்றால், இந்த நஞ்சு மாம்பழம் ஆப்பிடவில்லை' என்கிறதாகக் கிலேதப்பட்டுக் கொண்டு அந்த மரத்தைச் சுத்தி வருவாள்; கூக்குரல் போடுவாள். இந்த விதமாக இருக்கும்போது, காவல் காக்கிறவனும் அந்தச் சமயத்திலே இல்லை.

அப்போது பஞ்சவர்ணக் கிளியானது, இவள் அவதிப்படுகிறதையும் பார்த்து இவள் சொல்லுகிற வார்த்தையும் கேட்டு நமக்கான சமயம் ஈசுவரன் கொண்டு வந்துவிட்டான். நல்ல சமயமென்று அந்த மரத்தின் மேலேயிருந்து இந்த வண்ணத்தியைத் தப்பாமல் பார்த்து, ஒரு பழத்தை மூக்கினாலே கடிச்சு இவளுக்கு எதிரவே கொண்டு எறிந்து, தூரக்க உட்கார்ந்து பார்த்திருந்தது.

அந்த வேளையில் வண்ணாத்தியும் சீக்கிரம் ஓடிவந்து அந்த மாம்பழத்தை எடுத்துக் கையிலே வைத்துக் கொண்டு, நாலு பக்கமும் பார்த்தாள். அவடத்திலே ஒருவரும் இல்லை. இது நல்ல சமயம். இந்த நஞ்சு மாம்பழம் சாப்பிட வேணுமென்று வாயிலே போட்டுக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடும்போது, இந்த வண்ணாரக் கிழவி நல்ல பதினாறு வயசுக் குமரியாய்விட்டாள். அப்போது அந்த வண்ணாத்தியானவள், தன்னுடைய சரீரத்தைப் பார்த்துக் கொண்டு அதிசயப்பட்டு, 'ஓகோ! சிவனுடைய மாயையோ, இதுவென்ன காரணமோ! நாம் நஞ்சைச் சாப்பிட்டுச் சீவனை விட வேணுமென்று எண்ணிக்கொண்டு வந்ததற்கு நமக்கு இந்த ரூபம் வந்த காரணமென்ன? இன்னம் மருமகளோடே சண்டை போட்டுக் கொண்டு எத்தினை நாளிருக்கப் போறோமோ? இதுவரைக்கும் நமக்குத் தொண்ணூறு வயசாச்சுது. இதுவல்லாமல் மருமகளுடனே போர் குடுக்க நிருவாகமில்லாமல் சாகவெணுமென்று

வந்தோமே! இந்த ரூபம் நமக்கு எப்படி வந்தது? செத்துப் போன கிழவி மொட்டுப் போலே முளைச்சாளென்று பெரியோர்கள் சொல்லுகிற வசனம் இப்போ நிசமாச்சுது' என்று ஆச்சரியத்தோடே கூடிக்கொண்டு தன்னுடைய வீட்டுக்குப் போவோமென்று வருகிறாள்.

அந்தச் சமயத்துலே மாமரம் காக்கிறவன் கண்டான். சீக்கிரம் இவளண்டையில் ஓடிவந்து சொல்லுகிறான், "வாரும் பெண்ணே! நீ யார்? எங்கேருந்து வருகிறாய்? நான் வீட்டுக்குப் போன சமயம் பார்த்து இந்த வழியாக வருவாருண்டோ? ராசாவறிஞ்சால் என்னையும் உன்னையும் இரண்டு பேரையும் ஆக்கினை பண்ணச் சொல்லுவார். உன்னை ஒருநாளும் கண்டதில்லை. உன்னைக் கண்டால் நல்ல ரூபமாயிருக்குது. என் காவலுக்குள்ளே வந்த காரியமென்ன? சொல்லு!" என்று மரிச்சுக் கொண்டு கேட்ட தலையாரியுடைய முகத்தைப் பார்த்து வண்ணாத்தி சொல்லுகிறாள். "ஏன் பிள்ளாய்! என்னை

அறியயா? நான் வண்ணாத்தி அல்லவோ? நீ வீட்டுக்குப் போறபோது நான் எதிரே வந்தேனோயில்லையோ? என் பேர் நல்லமுத்து வல்லவோ" என்று சொன்னாள்.

அப்போது மிகவும் அதிசயப்பட்டு, "வாராய், வண்ணாத்தியே! உனக்கு இந்த ரூபம் வந்த காரியமென்ன? சொல்லு! வண்ணார நல்ல முத்து என்கிறவள் தொண்ணூறு வயசுக் கிழவியை நானறிவேன். நீ யாரும் பெண்ணே! உள்ள சேதியைச் சொல்லு!"என்றான்.

இப்படிச் சொன்ன தலையாரியைப் பார்த்துச் சொல்லுகிறாள். "வாரும் பிள்ளாய், தலையாரியே! நான் மருமகளுடனே சண்டை போட்டுக் கொண்டு இனிமேல் அவளுடைய முகம் பார்க்கலாகாதென்று நஞ்சு 'மாம்பழம் தின்னு சாக வேணுமென்று வந்தேன். வருகிறபோது, நீ புறப்பட்டு வீட்டுக்குப் போகிறபோது, அப்போதுதான் அசாறவாசலுலே நின்று சமயம்

பார்த்திருந்தேன். நீ போனவுடனே இது நல்ல சமயம் என்கிறதாக மாமரத்துச் சமீபத்திலே வந்து நாலு பக்கமும் சுத்திப் பார்த்தேன். அவடத்திலே ஒருவருமில்லை. மாமரமும் கண்ணுக்குத் தெரியவில்லை. அப்படியிருக்கிற வேளையில் ஒரு கிளியானது நஞ்சு மாம்பழத்தைக் கொத்தி என்னுடைய சமீபத்திலேதானே எறிந்தது. அந்த நஞ்சு மாம்பழம் நான் தின்னு செத்துப் போக வேணுமென்று அந்த மாம்பழத்தைப் பல்லாலே கடிச்சுச் சாப்பிட்டேன். அப்படியிருக்கிறபோதே எனக்கு நல்ல யௌவனம் வந்து விட்டது. நான்தான் நல்லமுத்துவென்று அறிஞ்சு கொள்ளும் பிள்ளாய்!" என்கிறதாகச் சொன்ன வண்ணாத்தியைப் பார்த்து அதிசயப்பட்டுக் கொண்டு இந்தச் சமாசாரம் சீக்கிரமாக ராசாவுக்கு அறிக்கை பண்ணாமலிருக்கப்படாதென்று, அவளையும் பின்னிட்டுக் கொண்டு ராசாவிருக்கிற கொலுவுக் கூடத்திலே போய் நின்று கொண்டு இந்த வண்ணாத்தியை முன்னிட்டு வைச்சுக் கொண்டு

கூக்குரல் போட்டான். அது என்னவென்றால், "மகா ராசாவே! தங்களுடைய புண்ணிய வசத்துனாலே நல்லமுத்துவென்கிற வண்ணாரக் கிழவி நஞ்சு மாம்பழத்தைத் தின்னு நல்ல பதினாறு வயசுள்ளவளாகி இதோ வந்து நிற்கிறாள். தேவரீர் பிராமரிக்க வேண்டியது" என்று கூக்குரல் போடவும் ராசாவானவர் தம்முடைய காருவாரை நிறுத்தி வைச்சு, "அந்தக் கூக்குரல் போட்டது யாருடா?" என்று விசாரிக்குமிடத்தில், தலையாரி கையைக் கட்டிக் கொண்டு, "பராக்கு எச்சரிக்கை, நான்தான் நஞ்சு மாம்பழம் காத்திருக்கிற காவல்காரன். இதோ ஒரு அதிசயம் வந்திருக்கிறது. என்பேரில் தயவு செய்து கேட்டால், அநேகம் பேருக்கு உபகாரமாயிருக்கும். மகாவினோதமாயிருக்கும். சுவாமி!" என்று சொன்ன தலையாரியைக் கொண்டு போய் ராசாவின் சமீபத்திலே விட்டார்கள்.

அந்தச் சமயத்திலே தலையாரியானவன் சீக்கிரம் திக்கு நோக்கித் தெண்டம் பண்ணி அஞ்சலி

பண்ணிக்கொண்டு சொல்லுவான். "மகாராசாவே! இந்த அதிசயம் கண்டேன். தங்களுடைய ஆக்கினைப் படிக்கு நஞ்சுமாமரம் காவல் கட்டிக் காத்திருக்கும்போது இந்த வண்ணாத்தி வந்து அந்த மாம்பழத்தைத் தின்னு இப்படிப்பட்ட ரூபங் கொண்டாள். இவள் தான் நம்முடைய அரமனையிலே காத்திருக்கிற நல்லமுத்துவென்கிற தொண்ணூறு வயசா யிருந்தவள், வண்ணாரக் கிழவி! தேவரீர் பிராமரிக்கும்படி கட்டளையிடவேண்டியது" என்றான்.

இப்படிப்பட்ட அதிசயத்தை ராசாவினுடைய சமூகத்திலே இருக்கிற சனங்களெல்லோரும் ராசாவும் கேட்டு மிகுதியும் ஆனந்தத்தை அடைஞ்சு இருக்கிற வேளையிலே, மகாராசாவானவர் வண்ணாத்தியைக் கண்டார். அந்த வேளையில் வண்ணாத்தியும் புன்சிரிப்புக் கொஞ்சமாய்ச் சிரித்துக் கொண்டு தலை குனிஞ்சு கொண்டு நிக்கிறவளைப் பார்த்தார். "இவாள் தானா வண்ணாத்தி?" என்று ராசா சொல்லிப் போட்டு, மந்திரியை அழைத்து, இவளுடைய பூர்வோத்திரம் விசாரிக்கச் சொல்லிக் கட்டளையிட்டார்.

அந்த ஆக்கினையை மந்திரியான கமலன் கேட்டு, "ஆகட்டும் சுவாமி!" என்கிறதாக ராசாவுக்கு உத்திரஞ் சொல்லிப் போட்டு, இந்த வண்ணாத்தியை அழைத்துச் சொல்லுவான், "அடி வாடி, வண்ணாரக் கிழவி! நீதானா நல்லமுத்துவென்கிறவள்? உனக்கு நஞ்சு மாம்பழம் சாப்பிடச் சொல்லித் தோணின காரியமென்ன? அந்தப் பழம் உனக்கு எப்படி ஆப்பிட்டது? அந்த வயணம் உள்ளபடியே சரியாய்ச் சொல்லடி" என்று கேட்ட உடனே வண்ணாத்தி சொல்லுவாள், "தேவரீர் கேட்ட விவரமெல்லாம் தெரிஞ்சுதய்யா, சுவாமி! நான் ஒன்றுமறியேன். வீட்டிலே மருமகள் என்னை வீட்டிலேயிருக்க வேண்டாமென்று சண்டைபட்டாள். அவள் மேலே மோகத்துனாலே என்னுடைய குமாரனும் பாத்துக் கொண்டு பேசாமல் இருந்தான். அப்படிப்பட்ட மருமகளைப் பார்த்துக் கொண்டிருக்கிறதாவென்று விதனப்பட்டுக் கொண்டு நஞ்சு மாம்பழம் சாப்பிட்டுச் சாக வேணுமென்று பிறப்பட்டு அரமனை அசாரத்து வழியாக மாமரத்தை வந்து கண்டேன். அவடத்திலே ஒரு கிளியானது மாம்பழத்தைக் கடிச்சுப்

போட்டிருந்தது. அந்தப் பழத்தை எடுத்துச் சாப்பிட்டதுண்டு. இந்த ரூபமானது நான் அடைஞ்சுவிட்டேன். இதேவொழிஞ்சு மத்தொரு சமாசாரம் நானறியேன்" என்று சொன்னவளைப் பார்த்து மிகவும் சந்தோஷப்பட்டு, இவளுடனே ஒரு ஊழியக் காரனையும் கூட்டி வீட்டு மேலே கொண்டுபோய் விட்டு இவளுடைய மருமகள் சொல்லுகிற சேதியைக் கேட்டு வரச்சொல்லித் திட்டம் பண்ணியனுப்புவிச்சான்.

அந்த மந்திரி சொன்னபடிக்கு அவளையும் கூட்டிக் கொண்டு போனார்கள். அப்போது வண்ணாத்தியினுடைய மருமகளானவள் மாமியாரைக் காணாமல் தேடிக்கொண்டு வழியிலே வருகிறபோது இவாளைக் கண்டு "நீங்கள் என்னுடைய மாமியைக் கண்டீர்களா?" என்று மிகவும் பரிதாபத்துடனே கேட்டாள்.

அந்த வார்த்தை வண்ணாரக் கிழவி கேட்டு, "வாடி, மருமகளே! இதோ வீட்டுக்கு வருகிறேன் உன்னுடைய உபத்திரவத்தினாலே நான் பொறுக்க மாட்டாமல் நஞ்சைத் தின்னு சாக வேணுமென்று இச்சிச்சதற்கு இப்படிப்பட்ட யௌவனம் வந்து லெபிச்சுது. இப்போ பாரும் பெண்ணே! உனக்கும் இளையவளாக அழகிலேயும் வயசுலேயும் உண்டாச்சுது. இனிமேல் உன்னுடனே சண்டை பண்ணுகிறத்துக்குப் பின்வாங்க மாட்டேன். நம்முடைய வீட்டுக்குப் போவோம் வாடி!" என்று மருமகளுக்கு உத்திரஞ் சொன்னாள்.

அந்த வார்த்தை மருமகளும் கேட்டு மிகுதியும் அதிசயப்பட்டு நடந்த வர்த்தமானமெல்லாம் சரிவரக் கேட்டு அவளும் இவளுமாகக் கூடிப் பேசிக்கொண்டு இருவரும் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள். அப்போ, இது விவரமெல்லாம் ராசாவுக்கு அறிக்கை பண்ணினார்கள்.

இப்படிக்கு மந்திரிமார்கள் சொன்ன உடனே ராசாவானவர் மிகவும் விதனப்பட்டு, “ஓகோ! என்ன பாவம் வந்து லெபிச்சுது! பிராமணனை வீடு வாசல் விட்டுப் போகச் சொன்னோமே! இப்படிப்பட்ட நன்மை செய்தவனுக்கு நாம் என்ன பாவத்தை நிறைத்து விட்டோம்! அந்தப் பிராமணன் எந்த ராச்சியத்திலே இருக்கிறானோ! என்ன அவதிப் படுகிறானோ! நாமிந்த அதிசயத்தை அறியாமலல்லோ கோபம் பண்ணிக் கொண்டு தீர்க்க யோசனை பண்ணாமலும் தீர விசாரியாமலும் போனோமே! நம்முடைய குருக்களுக்குக் கொடுத்த மாம்பழமானது என்ன விஷங்கள்பட்டு இருந்துதோ! அவர் சிவலோகம் போய்ச் சேர்ந்தார். இல்லாவிட்டால், அவருக்கு மரணமெப்படி வரும்’ என்று பரமசிவனை நினைத்தான்.

இப்படித் துயரப்படுகிற ராசாவைப் பார்த்து மந்திரிமார்கள் உபசாரம் பண்ணித் துக்கத்தை நிறுத்தி வைச்சு, சந்தோஷமாகச் செய்தார்கள். அந்தச்

சமயத்திலே பெரிய மந்திரியானவன் சொல்லுவான், "ஆகோவாருமய்யா, சுவாமி! மகாராசரே! நீர் ஒன்றுக்கும் விதனப்பட வேண்டாம். தேவருடைய குருக்களுக்கு ஆயிசு தீந்துது. ஆனபடியினாலே அவர் சிவலோகத்தையடைஞ்சார். அவருக்கு விதனப்பட்டுச் செய்யலாவதென்ன இருக்கிறது? இபபோது இந்த மாம்பழத்தைப் பறித்து வரச் சொல்லி இன்னொருதிரம் சோதினை பார்க்கலாம். அப்படியே கிருபையுமுண்டானால், நம்முடைய சீமையிலே இருக்கப்பட்ட சனங்களெல்லோருக்கும் குடுத்துச் சாப்பிடச் சொல்லுவோம். அப்பால் நாமும் சாப்பிடுவோம். இந்த மாம்பழத்தைக் கொண்டு வந்து குடுத்த பிராமணனையும் எங்கேயிருந்தாலும் ஊழியக்காரரை விட்டு அழைத்துவரச் சொல்லுவோம். ஆகையால் தேவரீர் விதனப்பட வேண்டியதில்லை" என்று சொல்லவும் ராசாவும் அப்படியே சம்மதித்தார்.

இந்தப் பூர்வோத்திரம் சகலமும் பஞ்சவர்ணக் கிளியானது, பாத்திருந்து, சவுமியனென்கிற பிராமணனுக்குச் சரியாகச் சொல்லி, அவரையும் அவருடைய பெண்சாதியும் கூட்டி வந்து எப்போதும் போலே அவர்களுடைய வீட்டிலே விட்டுது. அந்தப் பிராமணனும் பிராமணத்தியும் ராசாவினுடைய பேடியைப் பண்ணிக் கொண்டு சுகமேயிருந்தார்கள்.

★★★★★

# பின்னிணைப்பு - 2

## அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகத்தில் 'நாலு மந்திரி கதை' - சுவடிகள்

1. நாலு மந்திரி கதை
   தாள் சுவடி
   எண் : டி. 424
   ஆசிரியர் : _
   முழுமை

2. நாலு மந்திரி கதை
   தாள் சுவடி
   எண் : டி. 425
   ஆசிரியர் : _
   முழுமை

3. நாலு மந்திரி கதை கும்மி
   ஓலைச் சுவடி
   எண் : டி. 426
   ஆசிரியர் : _
   முழுமை

## திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத்தில் 'நாலு மந்திரி கதை' - சுவடிகள் அட்டவணை

| வரிசை எண் | நூலின் பெயர் | சுவடி எண் | ஏடுகள் | அளவு செ.மீ. | நிலை | செய்யுள் எண்ணிக்கை | குறிப்புகள் |
|---|---|---|---|---|---|---|---|
| 1. | நாலு மந்திரி கதை | 6157 | 53 | 42.1 x 3 | நன்று; முழுமை | உரைநடை | 7, 11, 1115 (கி.பி. 1940) மார்கழி மாதம் 29ஆம் தேதி எழுதியது. |
| 2. | நாலு மந்திரி கதை | 6328 | 32 | 38.5 x 3.8 | சிறு சிதைவு; முழுமை | உரைநடை | - |
| 3. | நாலு மந்திரி கதை | 8421 -a | 42 | 29.4 x 2.8 | சிறு சிதைவு; முழுமை | உரைநடை | - |
| 4. | நாலு மந்திரி கதை | 10347 | 67 | 42 x 2.5 | நன்று; முழுமை | உரைநடை | - |
| 5. | நாலு மந்திரி கதை | 10356 | 70 | 38.6 x 3 | நன்று; முழுமை | உரைநடை | 1045ஆம் ஆண்டு (கி.பி. 1830) ஆடி மாதம் 20–ஆம் தேதி எழுதியது. |
| 6. | நாலு மந்திரி கதை | 11608 | 30 | 37.8 x 2.8 | நன்று; முழுமை | உரைநடை | 1012 ஆம் ஆண்டு (கி.பி. 1837) கார்த்திகை மாதம் எழுதியது. |
| 7. | நாலு மந்திரி கதை (கும்மி) | 9235 | 14 | 40.5 x 3.5 | நன்று; குறை | - | கும்மிப்பாடல், ஆசிரியர் சின்னத்தம்பி |
| 8. | நாலு மந்திரி கும்மி | 5929 | 8 | 36.9 x 3.2 | நன்று; குறை | 90 | - |
| 9. | நாலு மந்திரி கும்மிப் பாட்டு | 3223 | 26 | 27.6 x 3.3 | நன்று; முழுமை | - | 1019ஆம் ஆண்டு (கி.பி. 1844) மாசிமாதம் 29 ஆம் தேதி எழுதியது. |

## துணை நின்ற நூல்கள்

1. அமிர்த மதன கூத்து நாடகம், பதிப்பாசிரியர் த. பூமிநாகநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1996.

2. சுவடிச்சுடர், பதிப்பாசிரியர்கள் முனைவர் தி. மகாலட்சுமி, முனைவர் சு. நிர்மலாதேவி, திரு த. பூமிநாகநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001.

3. சுவடிப் பதிப்புத் திறன் - தொகுதி 1, 2, பதிப்பாசிரியர்கள் முனைவர் சா. கிருட்டின மூர்த்தி, முனைவர் தி. மகாலட்சுமி, முனைவர் சு. நிர்மலாதேவி, திரு த. பூமிநாகநாதன், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2002.

4. சுவடிப்பதிப்பு நெறிமுறைகள், பதிப்பாசிரியர் முனைவர் த.கோ.பரமசிவம், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1989.

5. திருவனந்தபுரம் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ்ச் சுவடிகள் அட்டவணை, பதிப்பாசிரியர் இரா. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1983.

6. நாட்டுப்புற இயல் ஆய்வு, சு. சக்திவேல், மணிவாசகர் பதிப்பகம், சிதம்பரம், 1983.

7. பதிப்பியல், அன்னிதாமசு, அமுதநிலையம் லிமிடெட், சென்னை, 1997.

8. முத்தாரம்மன் கதை, பதிப்பாசிரியர் முனைவர் சு. நிர்மலாதேவி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1995.